# தமிழன்

THAMILAN தමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 242 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை (29.05.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 08, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50




'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

மேல் மாகாணத்தில் அவதானம்;

# பன்றிகளில் பரவும் வைரஸ்

02 பக்கம்



## வன்முறையைத் தூண்ட தமிழ்ப் படங்கள் காரணமா?



### இராஜாங்க அமைச்சர் டயனாவுக்கு சந்தேகம்; தீர்த்துவைத்து பதிலடி கொடுத்தார் மனோ

•நிர்ஷன் இராமானுஜம்

தமிழ்த் திரைப்படங்களே சிறுவர்கள் மத்தியில் வன்முறைகளைத் தூண்டுவதாக பாராளுமன்றத்தில் வெகுஜன ஊடக அமைச்சின் ஆலோசனை செயற்குழுக் கூட்டத்தின்போது இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்த கருத்துக்கு நேருக்கு நேர் கடும் எதிர்ப்பை வெளியிட்ட மனோ கணேசன் எம்.பி., அந்தக் கூற்றை மீளப்பெற வேண்டுமென வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும்... 02 பக்கம்

## 125 ஏக்கர் வனம் பூரணமாக அழிப்பு

### வவுனியாவில் அதிகாரிகள் அசமந்தப்போக்கு



•சிவகுமார் திவியா

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பம்பைமடு சுந்தரபுரம் 125 ஏக்கர் காடு தனிநபர்களால் பூரணமாக அழிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டுப்பகுதி முற்றாக அழிக்கப்பட்டு துப்புரவுப் பணிகளும் நிறைவுற்ற நிலையில், வனவள அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என காட்டுப்பகுதியை அண்மித்துள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். காணியற்ற நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றோம். 02 பக்கம்

## சாதாரண தர பரீட்சைகள் இன்று ஆரம்பம்



•த. யுவராஜ்

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், 06 மாதங்களின் பின்னர் இடம்பெறும் பரீட்சையை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மாணவர்கள் எதிர்கொள்ளவுள்ளனர்.

அந்தவகையில், இன்று முதல் ஜூன் 8ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள குறித்த பரீட்சையில், 4 இலட்சத்து 72 ஆயிரத்து 553 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இவர்களில் மூன்று இலட்சத்து 94 ஆயிரத்து 450 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

# பறிபோகும் நிலையில் 37 தமிழ்க் கிராமங்கள்!



### மகாவலி அதிகார சபையின் திட்டமிட்ட இனவழிப்பென்கிறார் சார்ள்ஸ் எம்.பி.

•மன்னார் நகர் செய்தியாளர்

மகாவலி அதிகார சபையின் செயற்பாடு தமிழர்களின் இனப்பரம்பலை அழிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. மகாவலி அதிகார சபைக்கு 37 தமிழ்க் கிராமங்களை உள்ளடக்கி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்காக பிரதேச செயலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் மன்னார் பிரதேச கிளைக்கான உறுப்பினர் தெரிவின் பின்னர் நேற்று (28) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 02 பக்கம்

## எரிபொருள் கோட்டா நாளை முதல் அதிகரிப்பு



•த. யுவராஜ்

நாட்டில் உள்ள அனைத்து வகையான வாகனங்களுக்கும் எரிபொருள் கோட்டாவை நாளை செவ்வாய்க்கிழமை முதல் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், முச்சக்கரவண்டி (விசேட) - 22 லீற்றர், முச்சக்கரவண்டி (பொது) - 14 லீற்றர், மோட்டார் சைக்கிள் - 14 லீற்றர், பஸ் - 125 லீற்றர், கார் - 40 லீற்றர், கனரக வாகனம் - 45 லீற்றர், லொறி - 125 லீற்றர், விசேட மற்றும் பொது தேவைகளுக்கான வாகனம் - 45 லீற்றர், வேன் - 40 லீற்றர் என எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

### கமெண்ட் கந்தர்...



தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களைத்தான் தமிழ்ப்படங்கள் என்று டயானா தெரியாமல் சொல்லிப்போட்டார் போல மனோ தம்பி..!

## இந்தியாவின் சக்தியை மீண்டும் காட்டியுள்ளோம்



### புதிய பாராளுமன்ற திறப்பு விழாவில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி உரை



செங்கோலை மோடி விழுந்து வணங்கியபோது...

•திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

புதிய பாராளுமன்றக் கட்டடம் நமது திறமை, பாரம்பரியத்தை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. சோழர் மரபிலிருந்து ராஜபாதையின் அடையாளமாக செங்கோல் திகழ்கிறது. 02 பக்கம்

### உஷ்



பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி டக்ளஸ் நாணயக்கார நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்.

ஜனக்க ரத்நாயக்க பாராளுமன்ற தீர்மானத்தால் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதால், டக்ளஸின் பெயரை அரசியலமைப்பு பேரவைக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

## ஷாப்டரின் மர்ம மரணம்

## முழு அறிக்கை இரு மாதங்களில்



பொரளை பொது மயானத்திலிருந்து கடந்த 25ஆம் திகதி தோண்டி எடுக்கப்பட்ட பிரபல தொழிலதிபர் ஷாப்டரின் உடல் மீதான பரிசோதனைகளின் முழுமையான அறிக்கையை எதிர்வரும்... 02 பக்கம்

## மூத்த இராஜதந்திரி தனபால காலமானார்



நாட்டின் மூத்த இராஜதந்திரி கலாநிதி ஜயந்த தனபால தனது 85ஆவது வயதில் நேற்றுமுன்தினம் (27) காலமானார்.

மாரடைப்பு காரணமாக காலை 10 மணியளவில் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். 02 பக்கம்

### பௌத்தத்துக்கு எதிராக மேடைப்பேச்சு

## சிங்கப்பூருக்கு தப்பிச்செல்ல முயன்றபோது நதாஷா கைது



கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பௌத்த மதத்துக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்ட குற்றச்சாட்டில் நகைச்சுவை மேடைப் பேச்சாளர்... 02 பக்கம்




# தேசத்தை காப்பாற்றிய தந்தையாக ரணிலை ஏற்றுக்கொள்ள வேண்டும்

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் ரங்கே பண்டார வவுனியாவில் தெரிவிப்பு



**சிவகுமார் திவியா**

தேசத்தின் பிதா டி.எஸ். சேனாநாயக்க என்றால் தேசத்தை காப்பாற்றிய தந்தையாக ரணில் விக்கிரமசிங்கவை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, எதிர்வரும் 2048 ஆம் ஆண்டு இந்த நாடு அபிவிருந்தி அடைந்ததாக மாறும் என நம்பிக்கை வெளியிட்டார்.

வவுனியா, மில் வீதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தை நேற்று (28) திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியே 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தது. சுதந்திரத்துக்கு பின்னரான 75 வருடத்தில் கடந்த 40 வருட காலம் யுத்தம் காரணமாக வடக்கிலும் தெற்கிலும் அபிவிருத்தி பாதிப்படைந்தது. 75 வருடத்தின் பின் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம், ஜனாதிபதி ஆகியோர் வர முடியாத நிலை வந்ததால் இந்த நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இந்த பிரச்சினைகளை சவாலாக ஏற்று அதனை தீர்க்க முன் வந்தவர் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. டி.எஸ்.சேனநாயக்கவை தேசத்தின் பிதா என்றால் ரணில் விக்கிரமசிங்கவை தேசத்தை காப்பாற்றிய தந்தையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவர் தற்போது இந்த நாட்டில் அனைத்து மக்களும் இன, மத, பேதங்கள் இன்றி ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும் என்று அரசியல் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார். இந்த நாட்டில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் என்ற பேதங்கள் இல்லாது எல்லோரும் ஒரு குடையின் கீழ் வந்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

2048 ஆம் ஆண்டு முழுமையாக அபிவிருத்தி அடைந்த நாடாக இந்த நாட்டை மாற்ற அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். சிலர் அதனை விமர்சிக்கிறார்கள். ஆனால் அவர் திட்டமிட்டு செயலாற்றுகிறார். எல்லா சமூகங்களும் மேம்பட வேண்டும். அதற்கு எல்லா சமூகங்களுக்குள்ளும் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட்டால் 2048 ஆம் ஆண்டு ஒரு அபிவிருத்தி அடைந்த நாடாக இந்த நாடு அமையும். அதனால் நன்மை அடையப் போவது இந்த நாட்டு மக்களே. அந்த சுபிட்சமான 2048 இற்கு நாம் செல்ல வேண்டுமாக இருந்தால் அவருடன் இணைந்து அவரை பலப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ம.மயூரதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

---

### வன்முறையைத் தூண்டுவதற்கு...

வெகுசனஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (26) இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகள், செய்திப் பிரிவின் பிரதானிகள், அமைச்சின் அதிகாரிகள், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஊடகங்கள் பின்பற்றும் நடைமுறைகள் மற்றும் அதனால் ஏற்படும் சமூக பாதிப்புகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு கருத்து வெளியிட்ட சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் தமிழ்த் திரைப்படங்கள் வன்முறைகளைத் தூண்டுவதாக அமைவதாகவும் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார். குறிப்பாக கொலை செய்தல், வெட்டுக் குத்துக் காயங்கள், வெளிப்படையாக வழங்கப்படும் தண்டனைகள் ஆகியன சிறுவர்கள் மத்தியில் மாறுபட்ட சிந்தனைகளைத் தூண்டுவதாக அவர் சுட்டிக்காட்டினார். இதன்போது குறுக்கிட்ட மனோ கணேசன் எம்.பி., டயனாவின் கருத்தை முற்றாக நிராகரிப்பதாகவும் திரைப்படங்கள் என்ற பொதுவான சொல்லாடல் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர, தமிழ்த் திரைப்படங்கள் என இன ரீதியாக பார்க்கக் கூடாது எனத் தெரிவித்தார்.

இதனால் இருவருக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

வன்முறைக் காட்சிகள் அனைத்து மொழித் திரைப்படங்களிலும் இடம்பெறுகின்றன. தமிழ்த் திரைப்படங்களாலேயே மக்கள் உள ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என மனோ கணேசன் தெரிவித்தார். கூட்டத்துக்கு தலைமைதாங்கிய அமைச்சர் பந்துல குணவர்தன இருவரையும் சமாதானம் செய்வதற்கு முயற்சித்தார்.

அதன் பின்னர், அனைத்து மொழி திரைப்படங்களிலும் அவ்வாறான காட்சிகள் இடம்பெறுகின்றன என்று வைத்துக்கொள்வோம். தமிழ் மொழித் திரைப்படங்கள் மாத்திரமல்ல இந்த விடயத்தில் விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டு ஒழுங்குமுறையான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என டயனா கமகே தெரிவித்தார்.

---

### பறிபோகும் நிலையில்...

சார்ள்ஸ் நிர்மலநாதன் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மகாவலி அதிகாரசபையின் செயற்பாடு என்பது தமிழர் தாயகப்பகுதிகளில் தமிழர்களின் இனப்பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை தமிழர் தாயகப்பகுதிகளுக்குள் கொண்டுவருவதற்கும் தமிழர்களை இன ரீதியாக இல்லாமல் செய்வதற்குமான செயற்பாடுகளை தந்திரமாக நீண்டகாலமாக முன்னெடுத்து வருகிறது. இதனை முழுமையாக நாம் கண்டிக்கிறோம்.

மகாவலி அதிகாரசபையால் முல்லைத்தீவு,வவுனியா மாவட்டங்களில் 1988 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் 14 கிராம அலுவலர் பிரிவுகள் அபகரிக்கப்பட்டு யுத்தத்தில் மக்கள் இடம்பெயர்ந்த போது முழுமையாக அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவி வெலிஓயா என்ற ஒரு புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கை பிரிக்கின்ற நோக்கத்துக்காக இந்த மகாவலி அதிகார சபை புதிய ஒரு பிரதேச செயலகத்தை உருவாக்கி கொக்கிளாய் முதல் செம்மலை வரை இருக்கின்ற 6 கிராம சேவகர் பிரிவுகளை அபகரிக்க முயற்சி எடுத்த போது எங்களுடைய தொடர் அழுத்தம் காரணமாக தற்காலிகமாக அந்த திட்டம் நிறுத்தப்பட்டிருக்கின்றது.

மகாவலி என்பது தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களையும் சிங்கள இனப்பரம்பலையும் செய்வதற்காக அரசாங்கத்தால் நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

அந்த வகையில் தற்பொழுது மகாவலி “ஜே” வலயம் என்ற ஒன்றை புதிதாக உருவாக்குவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கின்ற 7 கிராம அலுவலர் பிரிவுகளும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் இருக்கின்ற 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளும் மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடங்களாக மொத்தம் 37 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி மகாவலி அதிகார சபை புதிய வர்த்தமானி அறிவித்தல் செய்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இவ்விடயத்தை எதிர்த்து நான் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை முன் வைத்திருக்கிறேன் .அதற்கு நீர்ப்பாசன அமைச்சர் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் போது பதில் அளிப்பதாகக் கூறியிருக்கிறார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாலியாறு, அந்தோனியார்புரம், ஆத்திமோட்டை, இலுப்பக்கடவை, கல்லியடி ,கூராய், கோவில் குளம், காயா நகர் ,பெரியமடு கிழக்கு, பெரிய மடு தெற்கு பள்ளமடு ,விடத்தல் தீவு கிழக்கு,விடத்தல் தீவு மேற்கு,விடத்தல் தீவு வடக்கு,விடத்தல் தீவு மத்தி ஆகிய கிராமங்களையும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் அனிச்சங்குளம், பாரதி நகர் ,புகழேந்தி நகர், திருநகர் ,யோகபுரம் மத்தி,யோகபுரம் கிழக்கு,யோகபுரம் மேற்கு கிராமங்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் அம்பாள்புரம், கரும்புள்ளையான்,கொல்லிவிலான்குளம், மூன்று முறிப்பு, நெட்டாங்கண்டல்,கொட்டருத்த குளம், பாலிநகர், பாண்டியன் குளம், பொன் நகர், பூவரசங்குளம் ,செல்வபுரம் ,சிறாட்டி குளம், சிவபுரம் வன்னி விளாங்குளம், விநாயகபுரம் ஆகிய 37 கிராம அலுவலர் பிரிவுகளையும் “ஜே” வலயத்தில் இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றை மகாவலி அதிகார சபையின் கீழ் கொண்டு வந்து இந்த நிலங்களில் இருக்கும் குளங்களின் கீழ் காணப்படுகின்ற வன வளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் உள்ள காணிகளை அபகரித்து அதன் மூலம் சிங்கள மக்களுக்கு அதை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது அல்லது அந்த பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றுவது போன்றவற்றையே மகாவலி அதிகார சபை மிக வேகமாக செய்துவருகின்றது.

மகாவலி ‘எல்’ வலயம் முல்லைதீவு மாவட்டத்தில் 1988 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நிர்ணயம் செய்யப்பட்டது. இன்றைக்கு 35 வருடங்கள் கடந்தும் மகாவலி தண்ணீர் இன்னும் வரவில்லை.

மகாவலி தண்ணீர் அங்கு வராமல் இருக்கிறபோது அங்கு புதிய சிங்கள பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டு சிங்கள மக்களும் குடியேற்றப்பட்டு மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் இந்த திட்டம் என்பது தமிழர்களுடைய இனப்பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை இங்கு கொண்டுவருவதற்கும் தமிழர்களை இனரீதியாக இல்லாமல் செய்வதற்கும் இன அழிப்பின் ஒரு நீண்ட கால தந்திரமே இந்த மகாவலி அதிகாரசபையின் செயல்பாடு.

இதை முழுமையாக நாங்கள் கண்டிக்கின்றோம்.முழுமையாக எதிர்க்கின்றோம் இதை நடைமுறைப்படுத்த விடாமல் செய்வதற்கு பல முயற்சி செய்துள்ளேன். பாராளுமன்றத்தில் பிரேரணையும் முன்வைத்துள்ளேன். அதையும் மீறி ஜனாதிபதியை சந்திப்பதற்காக நான் அனுமதி கேட்டிருக்கின்றேன். அவரிடம் குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்துவேன்.

அதையும் மீறி மகாவலி “ஜே” வலயம் மகாவலி அதிகார சபையினால் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்டால் வெகுஜன போராட்டத்தின் ஊடாக முழுமையாக முல்லைத்தீவு, மன்னார் மக்கள் இணைந்து இத் திட்டத்தைய் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

### இந்தியாவின் சக்தியை...

இதன்மூலம் இந்தியாவின் சக்தியை மீண்டும் உலகுக்கு காட்டியுள்ளோம். இது இந்தியாவின் வளர்ச்சியை மட்டுமல்ல உலகின் வளர்ச்சியையும் பறைசாற்றுகிறது என பாரதப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (28) தெரிவித்தார்.

புதுடில்லியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பாராளுமன்றக் கட்டடத் தொகுதியை திறந்துவைத்து உரையாற்றும்போதே நரேந்திர மோடி இவ்வாறு குறிப்பிட்டார்.

புதிய பாராளுமன்றத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைத்தார். திறப்பு விழாவின் 2ஆம் கட்ட நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தொடங்கியது. விழாவுக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியை கரகோஷம் எழுப்பி முக்கிய பிரமுகர்கள் வரவேற்றனர். அதன்பின்னர் பாராளுமன்றம், செங்கோல் குறித்த திரைப்படங்கள் விழாவில் திரையிடப்பட்டன.

அதன் பின்னர் மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் சிங், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உரையாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவு பெற்றதைத் முன்னிட்டு ரூ.75 நாணயத்தை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார். மேலும் புதிய பாராளுமன்ற கட்டடத் திறப்பு விழாவை நினைவுகூரும் தபால் தலையையும் பிரதமர் வெளியிட்டார்.

அதன் பின்னர் திறப்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அவர் பேசியதாவது,

75வது சுதந்திர தினத்தை கொண்டாடி வரும் இந்த நேரத்தில் புதிய பாராளுமன்ற கட்டட திறப்பு விழாவுக்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இது வெறும் கட்டடம் மட்டுமல்ல 140 கோடி மக்களின் கனவுகளை நனவாக்கும் இடம். மே 28ஆம் திகதி வரலாற்றில் எப்போதும் பொறிக்கப்பட்டிருக்கும் சிறப்புமிக்க தருணம் இது.

புதிய பாராளுமன்ற கட்டடம் நமது திறமை மற்றும் பாரம்பரியத்தை பறைசாற்றுவதாக உள்ளது. ஒவ்வொரு இந்தியனும் கௌரவமாக உணர்கின்றனர். இந்த புதிய பாராளுமன்ற கட்டடம் பழமை மற்றும் புதுமைகளை பிரதிபலிக்கும் இடமாக இருக்கும். இந்த புதிய பாராளுமன்ற கட்டடம் 75வது சுதந்திர தினத்தையொட்டி நாட்டுக்கு வழங்கப்படும் பரிசு. இது நமது ஜனநாயகத்தின் கோயில், வார்த்தைகளை செயல்பாட்டுக்கு கொண்டு வருவது தான் பாராளுமன்றம்.

இந்தியாவின் சக்தியை இன்று மீண்டும் உலகுக்கு காட்டியுள்ளோம். இது இந்தியாவின் வளர்ச்சியை மட்டுமல்ல உலகின் வளர்ச்சியையும் பறைசாற்றுகிறது. இன்றைய தினம் (நேற்று) புனித செங்கோல் பாராளுமன்றத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த செங்கோல் நீதி, நேர்மை, தேசப்பற்று ஆகியவற்றை பிரதிபலிக்கும். செங்கோலை மிகுந்த மதிப்போடு வணங்குகிறேன். செங்கோலின் கௌரவத்தை மீண்டும் பறைசாற்றுவோம். சோழர் மரபிலிருந்து ராஜபாதையின் அடையாளமாக செங்கோல் திகழ்கிறது. செங்கோலை வழங்கிய ஆதீனங்களின் முன்பு நான் தலை வணங்குகிறேன்.

இந்தியா ஜனநாயகத்தின் தாயாக விளங்குகிறது. நமது அரசியலமைப்பு சட்டம் தான் நமது சின்னம். நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டை காக்கவேண்டும். முயற்சியை தொடரும்போது முன்னேற்றமும் தொடரும். 75 ஆண்டு சுதந்திர இந்தியா பல்வேறு சவால்களை கடந்து வந்துள்ளது.காலத்துக்கு ஏற்றவாறு நம்மை தகவமைத்துக்கொள்ள வேண்டும். சோழர் மற்றும் முகலாயர் காலத்து கட்டட கலைகள் வெளிநாட்டவர்களை ஈர்க்கும் வகையில் உள்ளது. இந்தியாவின் வளர்ச்சி மற்றும் குறிக்கோளை நிறைவேற்ற புதுமைகளை படைக்க வேண்டும். புதிய பாராளுமன்றம் இந்தியா வளர்ச்சியுடன், உலகத்தின் வளர்ச்சியையும் எடுத்துரைக்கும். நாட்டின் வலிமையை புதிய பாராளுமன்றம் பறைசாற்றுகிறது. ஒரே இந்தியா வலிமையான இந்தியா என்பதையும் நாட்டின் தேசிய சின்னங்களையும் பிரதிபலிக்கிறது.

பா.ஜ.க. அரசாங்கம் கடந்த 9 ஆண்டுகளில் ஏழைகளின் வளர்ச்சிக்காக பாடுபட்டது. அவர்களுக்காக 4 கோடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.இந்தியா 100 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது, வளர்ச்சியடைந்த நாடாக இருக்கும் என்றார்.

---

### ஷாப்டரின் மர்ம மரணம்...

இரு மாதங்களில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் சடலம் மீதான முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளதாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ரொஹான் டி.ருவன்புர தெரிவித்துள்ளார்.

சடலம் தொடர்பான மேலதிக பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை குறித்த முழுமையான அறிக்கையை வெளியிடுவதற்கு இன்னும் 2 மாதங்கள் செல்லும் எனவும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கூறினார்.

முதற்கட்ட பரிசோதனை அறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் என சட்ட வைத்திய அதிகாரி ரொஹான் டி.ருவன்புர தெரிவித்தார்.

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் உயிரிழப்பு தொடர்பில் தடயவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய விசேட சட்ட மருத்துவ அதிகாரிகளால், நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஷாப்டரின் சடலம் கடந்த 25 ஆம் திகதி தோண்டி எடுக்கப்பட்டது.

பொரளை பொது மயானத்தில் தனது காரில் கை கட்டப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி தினேஷ் ஷாப்டர் மீட்கப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட தினேஷ் ஷாப்டர் அன்றைய தினம் இரவு உயிரிழந்தார்.

---

### சாதாரண தர பரீட்சைகள்...

நாடளாவிய ரீதியில் உள்ள மூவாயிரத்து 568 பரீட்சை மத்திய நிலையங்களிலும் 40 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

விசேட தேவையுள்ள மாணவர்களுக்காக இரத்மலானை, தங்காலை ஆகிய பகுதிகளில் இரண்டு விசேட பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சிறைக் கைதிகளுக்காக பரீட்சை மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களுக்காக விசேட பரீட்சை மத்திய நிலையம் அமைக்கப்பட் டுள்ளது.

சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் டெங்கு காய்ச்சலில் இருந்து பாதுகாப்பு பெற உடலை மறைக்கும் வகையில் பொருத்தமான ஆடைகளை அணிந்து பரீட்சை நிலையங்களுக்கு செல்லுமாறு பரீட்சைகள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பரீட்சார்த்திகளின் போக்குவரத்து வசதிகளுக்காக மாணவர்களுக்கான பஸ் சேவையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

---

### பௌத்தத்துக்கு எதிராக...

நதாஷா எதிரிசூரிய (32) குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் சிங்கப்பூர் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் கடந்த சனிக்கிழமை கலந்து கொண்டு பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்டமை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாக மாறியிருந்தது. இந்நிலையிலேயே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நதாஷா கைதுசெய்யப்பட்டுள்ளார்

---

### மேல் மாகாணத்தில்...

மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் பன்றிகளுக்கு வைரஸ் நோய் பரவி வருவதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

பன்றிகளின் சுவாச மண்டலத்தில் ஏற்படும் இந்த வைரஸ் நோய் TRRS என்ற பெயரால் அறியப்படுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் டொக்டர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட பன்றிகள் உயிரிழப்பதாகவும் நோய்க்கான தடுப்பூசிகளை உடனடியாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஹேமாலி கொத்தலாவல குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த வைரஸ் மனிதர்களுக்கு பரவும் அபாயம் இல்லை என அவர் கூறினார்.

இதேவேளை, வடக்கிலும் குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் கால்நடைகள் தோல் நோய் அறிகுறிகளுடன் காணப்படுவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தின் ஹொரம்பாவ, நாரம்மல, கெக்குணகொல்ல, மெட்டியாவ, மிதியால, பண்டாரகொஸ்வத்த, பரகஹகொட்டுவ உள்ளிட்ட பகுதிகளில் மாடுகளிடையே தோல் கழலை நோய் பரவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. குறித்த நோய்த் தாக்கத்தினால் குறித்த பகுதிகளில் நூற்றுக்கும் அதிகமான மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### மூத்த இராஜதந்திரி...

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இராஜதந்திர அதிகாரியாகப் பணியாற்றினார்.

அத்துடன் கலாநிதி ஜயந்த தனபால ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் தூதுவராக பணியாற்றினார்.

மேலும், 1998ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளின் ஆயுதக் குறைப்பு விவகாரங்களுக்கான அலுவலகத்தின் துணைச் செயலாளராகவும் அவர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

### 125 ஏக்கர் வனம்...

நாங்கள் எங்கள் வாழ்வாதாரத்துக்காக பற்றைக் காடுகளைத் துப்புரவு செய்து உழுது, விதைத்தாலே உடனடியாக வனவள அதிகாரிகள் எம்மை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி தண்டனை வாங்கித் தருவார்கள்.

ஆனால் தற்போது நூறு ஏக்கருக்கு மேல் காடுகள் அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வனவள அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமை எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாக மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த பகுதி காடு என்பதனால் இதனைத் துப்புரவு செய்வதற்கு ஜனாதிபதி, அமைச்சரவை, காணி ஆணையாளர், காணி அமைச்சர் ஆகியோரின் அனுமதி கட்டாயம் தேவையான ஒன்றாகும். இவை எவையும் இன்றி நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் காணப்பட்ட மரங்கள் அழிக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இது தொடர்பாக மக்கள் முறையிட்ட போது குழுத்தலைவர் குலசிங்கம் திலீபன் எம்.பி. இவ்விடயத்தை ஜனாதிபதி வரையும் கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் விசேட கலந்துரையாடல்



ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளுக்கிடையிலான விசேட கலந்துரையாடலொன்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் மேற்படி அமைச்சில் இடம்பெற்றது.

நீர்வளத்துறையில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைக்கான ஒப்பந்தங்களை இறுதிப்படுத்தும் நோக்கிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.மூன்று ஆண்டு கால சீர்திருத்த திட்டத்தில் ஒருமித்த கருத்தை அடைவதே கூட்டத்தின் நோக்கமாகும்.

சீர்திருத்த வேலைத்திட்டமானது இலங்கையின் நீர்த்துறையில் உள்ள பல அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மாற்றியமைக்கும் முன்முயற்சி B யிடமிருந்து கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளது.இது சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்த பட்ஜெட் ஆதரவு உதவியாக 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கலந்துரையாடல் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை இறுதி செய்வதற்கு வழிவகுத்தது.

இந்தசந்திப்பின் போது அமைச்சர் ஜீவன் தொண்டமான், மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை நிறைவு செய்வதற்கான தெளிவான வழிகாட்டுதல்களையும் காலக்கெடுவையும் வழங்கினார்.

# சிலாபம் களப்பினால் ஏற்படும் சுகாதார அச்சுறுத்தலுக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு









சிலாபம், களப்பு மாசடைதல் தொடர்பான பிரச்சினையை உடனடியாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதுடன் விசேட அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து தீர்வைப் பெற்றுத் தருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சிலாபத்துக்கான கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிலாபம் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிலாபம் களப்பினுள் அப்குதியிலுள்ள இறால் பண்ணைகளால் வெளியேற்றப்படும் இரசாயனம் கலந்த கழிவுநீர் மற்றும் சிலாபம் நகர சபை, சிலாபம் பொது வைத்தியசாலை என்பவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் கலப்பதன் காரணமாக களப்பு நீர் மாசடைந்துள்ளதாக கடற்றொழிலாளர்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் அப்பகுதிக்கான கண்காணிப்பு விஜயமொன்றை நேற்றுமுன்தினம் (27) துறைசார் அதிகாரிகள் சகிதம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் நேரடியாக நிலைமைகளை அவதானித்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில், இறால் பண்ணைகளால் வெளியேற்றப்படும் இரசாயனம் கலந்த கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் களப்பில் கலப்பதும் சிலாபம் பொது வைத்தியசாலை மற்றும் நகர சபை என்பவற்றால் வெளியேற்றப்படும் குப்பை கூளங்கள் மற்றும் கழிவுப் பொருட்கள் என்பனவே களப்பு மாசடைவதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக சிலாபம் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் அதில் கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, நாரா மற்றும் நெக்டா ஆகிய நிறுவனங்களின் உயரதிகாரிகள் இக் குழுவின் உறுப்பினர்களாக செயற்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

இதன்போது எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டபோது சிலாபம் பிரதேச கடற்றொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் சிலாபம் கடற்றொழில் துறைமுக வானொலி தொடர்பாடல் கட்டமைப்பு சரியாக இயங்குவதில்லை போன்ற விடயங்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அதற்கு பதிலளித்த அமைச்சர், வானொலி தொடர்பாடல் கட்டமைப்பை புனரமைப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவையெனவும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பான விபரங்களை வழங்குமாறும் அதற்கிணங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து இரத்நாயக்க, மேலதிக செயலாளர் நாமல் தலங்கம, நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கமல் தென்னக்கோன், நெக்டா அமைப்பின் பணிப்பாளர் நாயகம் அசோகா, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 15 ம் நாள்
திங்கட்கிழமை

**மேஷம்** பண வருவாய் திருப்திகரமாக அமையும். உடல் நோய்கள் தீரும். முயற்சி பலிதம் ஏற்படும்.

**ரிஷபம்** வீணான மனக்கவலைகளை விடுத்து, எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சி எடுங்கள்.

**மிதுனம்** எதையும் துணிவுடன் செய்ய மாட்டீர்கள். மற்றவர்களை நம்புவதற்கு முன்னர் இரண்டு முறை யோசியுங்கள்.

**கடகம்** நினைத்த காரியத்தில் வெற்றிவாகை சூடுவீர்கள். குடுபத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும்.

**சிம்மம்** பணம் பொருள் நட்டம் ஏற்படும் நாள். வீண் வாக்குவாதங்களால் தொல்லைகள் ஏற்படும்.

**கன்னி** வீண் மனக் குழப்பங்கள் வேண்டாம். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம்.

**துலாம்** செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். தேவையற்ற பயணங்களால் தொல்லை உண்டு.

**விருச்சிகம்** நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் உங்கள் நண்பர் மூலம் கிடைக்கும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும்.

**தனுசு** முயற்சித்த தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மகரம்** தந்தையின் உடல் நிலையில் கவனம் வேண்டும். பொறுமையோடு அனைத்தையும் கையாளுங்கள்.

**கும்பம்** பயணங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. திடீர் கோபத்தால் மனதில் அமைதி இருக்காது.

**மீனம்** உறவினர்களுடன் விருந்துண்டு மகிழ்வீர்கள். மனைவியால் நன்மையும் லாபமும் உண்டு.

**திதி** : நவமி மு.ப.11.49 வரை பின் தசமி (வளர்)
**நட்சத்திரம்** : உத்தரம் பி.இ. 04.29 வரை பின் அஸ்தம்
**யோகம்** : சித்த யோகம் பி.இ.4.29 வரை பின் மரண யோகம்
**வார சூலம்** : கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்** : பி.ப. 11.50– 12.20 மணிவரை
**ராகுகாலம்** : 7.20– 8.50 மணி வரை
**எமகண்டம்** : 10.20– 11.50 மணி வரை
**குளிகை** : 1.20– 2.50 மணி வரை
**சந்திராஷ்டமம்** : கும்பம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்** : பரணி,பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# மன்னாரில் பெண்கள் மரபுசார் உணவுக் கொண்டாட்டம்









(மன்னார் நிருபர்)

தமிழர் பாரம்பரிய உணவுகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் முகமாக மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியன் எய்ட் நிறுவனத்தின் நிதி ஒழுங்கமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மரபு சார் உணவுக் கொண்டாட்டம் மேற்படி ஒன்றியத்தின் தலைவி மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் சனிக்கிழமை(27) மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பெண்கள் குழுக்களை ஒன்றிணைத்து உணவுகளை தயாரித்து காட்சிப்படுத்தி அதன் ஊடாக இயற்கையான முறையில் உணவு தயாரிப்பை அதிகரிக்கும் முகமாக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேல், சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் ,பெண்கள் ஒன்றிய செயற்பாட்டாளர்கள், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்,முஸ்லிம் மாதர் அபிவிருத்தி ஒன்றிய குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாதர் சங்கத்தின் பெண் உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட 500 க்கும் மேற்பட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் மாதர் ஒன்றிய இளைஞர் குழுவினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# வாகன விபத்து ஒருவர் மரணம்

உறவினரொருவரின் மரணச் செய்தியை உறவினர்களுக்கு கூறுவதற்காகச் சென்ற வயோதிபர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், நுணாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி கமலநாதன் (வயது 74) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தனது உறவினரை சனிக்கிழமை பார்வையிடச் சென்ற போது குறித்த உறவினர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தகவலை உறவினர்களுக்கு தெரிவிப்பதற் காக வைத்தியசாலையில் இருந்து துவிச்சக்கர வண்டியில் விரைந்த போது யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் பயணித்த கார் மோதி சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் கார் சாரதியை கைது செய்துள்ளனர்.

# மஸ்கெலியா புனித ஜோசப் தேவாலய வருடாந்த திருவிழா





மஸ்கெலியா புனித ஜோசப் தேவாலய வருடாந்த திருவிழா நேற்று(28) இடம்பெற்றது.நிகழ்வில் கண்டி மறை மாவட்ட ஆயர் கலந்து கொண்டு திருப்பலி ஒப்புக்கொடுத்தார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ திருசொரூப பவனி இடம்பெற்றது. (மஸ்கெலியா நிருபர்)

# நுவரெலியாவில் டெங்கு ஒழிப்புத்திட்டம்





(எஸ்.கணேசன்)

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்லும் நுவரெலியா மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.நுவரெலியா மாவட்ட செயலகமும் நுவரெலியா மாநகர சபையும் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

நுவரெலியாவில் டெங்கு பரவினால் அது சுற்றுலாத்துறைக்கு பெரும் தாக்கமாக அமையும் என்பதால் டெங்கு பரவக்கூடிய இடங்களை தூய்மைப்படுத்துமாறு மாவட்ட செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன் முதற்கட்டமாக நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் மாவட்ட செயலாளர் தலைமையில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.உள்ளூராட்சிமன்ற நிறுவனங்கள், தோட்ட நிர்வாகங்கள், கிராமியக்குழுக்கள் என்பவற்றை இணைத்துக்கொண்டு நுவரெலியா மாவட்டம் முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# மாணிக்கவாசகத்துக்கு வவுனியாவில் நினைவஞ்சலி







(வவுனியா நிருபர்)

இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் ஊடகப்பேராளுமையுமாகிய பொன்னையா மாணிக்கவாசகத்தின் 45ஆவது நாள் நினைவஞ்சலி நிகழ்வு வவுனியா மாநகர மண்டபத்தில் நேற்று முன்தினம்(27) இடம்பெற்றது.

வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அன்னாரது உருவப்படத்துக்கு மூத்த ஊடகவியலாளர் ரத்துகமகே மலர்மாலை அணிவிக்க, வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் பிரதான அஞ்சலி சுடரை ஏற்றியதுடன் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மலரஞ்சலி செலுத்தி ஒளித்தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

ஊடக அமையத் தலைவர் ப.கார்த்தீபனின் வரவேற்புரையைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. இதன்போது ஊடகவியலில் மாணிக்கவாசகம் எனும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரத்துகமகே சிறப்புரை நிகழ்த்தினார். கலை பண்பாட்டு வளர்ச்சியில் மாணிக்கம் எனும் தலைப்பில் வவுனியா வடக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபனும் மக்கள் சேவையில் மாணிக்கவாசகம் எனும் தலைப்பில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமாரும் வாசகர்பார்வையும் அனுபவ பகிர்வும் எனும் தலைப்பில் ஐயம்பிள்ளை யசோதரனும் கருத்துரை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து பிரமுகர் வரிசையில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய முதல்வர் ஆ.லோகேஸ்வரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன், தமிழரசுக் கட்சியின் இளைஞரணி தலைவர் க.சிவதர்சன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

குறித்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் தரப்பினர், சகோதரமொழி ஊடக நண்பர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 29ஆம் திகதி, திங்கட்கிழமை**

# சந்திரிகாவின் இரட்டை முகம்

இனப்படுகொலை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிட்ட கருத்து தொடர்பில் எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டில் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நீதியான விசாரணை எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இந்த நிலையில்தான் வெளிநாடுகளின் தலைவர்களும் சர்வதேசப் பிரதிநிதிகளும் இலங்கை அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருவதுடன், நாட்டை அவமானப்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட்டும் வருகின்றனர்.

ஒரு நீதியான உள்நாட்டு விசாரணை நடத்திருந்தால் வெளியில் இருப்போர் நாட்டையும், அரசையும் இவ்வாறு தூற்றி இருக்கமாட்டார்கள். எனினும், கனேடியப் பிரதமர் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்தது என்று கூறும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். விசாரணைகள் எதுவுமின்றி இப்படியான சொல்லை கனேடியப் பிரதமர் பயன்படுத்தியது கண்டனத்துக்குரியது" என்று கூறியுள்ளார் சந்திரிகா.

சந்திரிகாவின் மேற்படி கருத்தின் உள்ளர்த்தத்தை அரசியல் அறிவுள்ள எவரும் இலகுவில் புரிந்துகொள்வார்கள். சந்திரிகா ஆட்சிக் காலத்திலேயே நவாலி படுகொலைகள் முதல் கடத்தல், காணாமற்போதல், இராணுவ நடவடிக்கைகள்வரை மோசமாக இடம்பெற்றன. அதனால் இனப்படுகொலை நடைபெற்றது என்பதை சந்திரிகாவால் ஏற்கமுடியாது. அவரது ஆட்சிக்காலத்திலும் தமிழர்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்டனர்.

சந்திரிகா ஆட்சி செய்தபோது அந்த அரசாங்கத்தின் ஆண்டின் முழுச் செலவில் நூற்றுக்கு 25 வீதம் யுத்தத்துக்கு செலவிடப்பட்டது. அது ரூபா 5000 கோடிக்கும் அதிகமாகும். 1995இல் அரசாங்கம் சுகாதாரத்துக்கு 1095 கோடி ரூபாவை செலவு செய்தது. கல்விக்கு 1890 கோடி ரூபாவை செலவு செய்தது. இதனை 1994ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 1995இல் பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் கீழ் பாதுகாப்பு செலவு நூற்றுக்கு 50 சதவீதத்தினால் அதிகரித்ததோடு, பொதுமக்களின் உயிர்களைக் காக்கவும் எதிர்கால சந்ததியினரின் கண்களைத் திறக்கவும் அவசியமான சுகாதார, கல்வி சேவைகளுக்காகவும் ஏற்பட்ட செலவுடன் ஒப்பிடும்போது அதில் எந்தவிதமான அதிகரிப்பும் அப்போது ஏற்படவில்லை.

அந்நிலையில் 1996 வரவு-செலவு திட்டத்தில் சுகாதாரத்திற்கும் கல்விக்கும் ஒதுக்கப்பட்ட தொகையையும் விட, இனவாத யுத்தத்துக்கும் இராணுவமயமாக்கத்துக்கும் ஒதுக்கிய தொகை அதனையும் தாண்டி மேலும் 30 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. அந்த விதத்தில், இதனை 1994ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 80 வீதத்தினால் அதிகரிக்க அப்போதைய பொதுஜன பெரமுன அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 1995 ஜூன் 1ஆம் திகதி தொடக்கம் 1996 ஜூன்1ஆம் திகதி வரையிலான ஒரு வருட காலத்துக்குள் 1270 கொலைகள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையொன்று கூறியுள்ளது. அதாவது ஒரு நாளைக்கு ஏறக்குறைய 5 கொலைகள் இடம்பெற்றன. அந்த வருடத்தில் 2246 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறானால் ஒரு நாளைக்கு 7 கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன. 565 வாகன கொள்ளையடிப்புகள் மற்றும் 43 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களும் அக்காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர, பொலிஸ் அறிக்கைகள் மூலம் அம்பலமாகும் இந்த சமூக அழிவு, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் இடம்பெற்றவை மட்டுமே. யுத்தப் பிராந்தியமான வடக்கு-கிழக்கில் இடமபெற்ற கொலைகள், சமூக ஊழல்கள் இதைக் காட்டிலும் பிரம்மாண்டமானவை என்பதைக் கூறவும் வேண்டுமா?

நாட்டின் இந்த சீரழிவுக்கும், இனரீதியான அழிவுகளுக்கும் சந்திரிகா அம்மையார் பதில் கூற வேண்டும். தீவிர இனவாதிகள் என்ற வகிபாகத்தை கொண்டிருந்த ஜே.வி.பி. எனப்படும் ஜனதா விமுக்தி பெரமுனவினரை அரவணைத்து காய்களை நகர்த்தி, செய்வதையெல்லாம் செய்துவிட்டு இன்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார் சந்திரிகா. யுத்தத்துக்கு கூடுதல் நிதியை ஒதுக்கியது பக்கத்து நாட்டு படைகளை அழிக்கவா? விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டமை ஒருபுறமிருக்க அந்த காலகட்டத்தில் கொல்லப்பட்ட சாதாரண மக்களை எந்த வகைக்குள் சேர்ப்பது?

இலங்கையில் இனப்படுகொலை நடந்ததா, இல்லையா என்பது சந்திரிகாவின் மனச்சாட்சிக்குத் தெரியும். இனப்படுகொலை நடந்ததா, இல்லையா என்பது முழு உலகுக்கே தெரியும். இப்போது மீண்டும் ஜனாதிபதியாக வரலாமென கனவுகாணும் சந்திரிகா சிங்கள வாக்குகளை இலக்கு வைக்கிறார். அவ்வளவே..!



# வெப்பத்தைத் தணிக்கும் வாழ்வியல் முறைகள்!

நம் முன்னோர்கள் பெரும்பொழுதை கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என ஆறுவகையாக இலக்கண விளக்க நூலில் தொகுத்து உள்ளனர். அந்த வகையில் இப்போது இளவேனில் காலம் நடக்கிறது. இக்காலத்தில் பூமியின் வடக்கு அரைக்கோளம் சூரியனை நேராக எதிர்கொள்வதால் சூரியனின் கதிர் நேரடியாக பூமியின் மீது விழுகிறது. அதன் காரணமாக வெப்பம் அதிகரிக்கிறது.

"அண்டத்தில் உள்ளதே பிண்டம்" என்பதற்கிணங்க தம் உடலிலும் வியர்வையும் வெப்பமும் பெருகும். அதன் விளைவாக எவ்வளவு நீர் அருந்தினாலும் தாகம் அடங்காமை, உடல் உலர்தல், அதிக வியர்வை காரணமாக உடல் அசதி, சோம்பல், சருமப் பிரச்சினை தசைப்பிடிப்பு போன்றவை ஏற்படும். குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், உயர்குருதி அழுத்தம், நீரிழிவு போன்ற இணைநோயுள்ளவர்கள் கவனத்துடன் செயற்படவேண்டிய காலகட்டம் இது.

இந்நாட்களில் என்னென்ன விடயங்களை செய்யலாம் - எவை செய்யக்கூடாது என்பதை நம் முன்னோர்கள் விளக்கியுள்ளனர்.

கோடைகாலத்தில் முதலில் நாம் உடலுக்கு போதுமான நீரைப் பருக வேண்டும். சராசரியாக 2.7- 3.7 லீற்றர் நீரை தினமும் பருகுவதன் மூலம் அதிகப்படியான வியர்வை காரணமாக ஏற்படும் நீரிழப்பைத் தவிர்ப்பதோடு நீர்ப்பாதை தொற்றில் இருந்தும் தப்பலாம்.

பொதுவாக நாம் குடிக்கும் நீரில் நெல்லிக்கனி/நெல்லிக்கட்டை, நன்னாரி, சீரகம் அல்லது வெட்டிவேர் சேர்த்து ஊறவைத்து பருக பித்தம் தணிந்து, வயிற்றுநோய், சுரம் போன்றவை ஏற்படாமல் தடுக்க உதவும். தேற்றான்கொட்டை, நெல்லிக்கனி போன்றவை கற்பவினம் என்பதால் நோயில்லாமல் நெடுநாள் வாழ வழிவகுக்கும்.

மேலும், இக்காலத்தில் அதிகப்படியான வியர்வை உண்டாவதால் ஏற்படும் தாது உப்புகள் இழப்பை சரிசெய்ய இளநீர் பருகி வரலாம். இதிலுள்ள சோடியம், பொட்டாசியம், கல்சியம், மெக்னீசியம் மற்றும் பொஸ்பரஸ் போன்ற தாதுகள் இழந்த நீர்ச்சத்தை சீர்செய்து சோர்வை உடனே நீக்கி நன்மை பயக்கும்.

அடுத்து நாம் பின்பற்ற வேண்டியது பருவத்திற்கேற்ற காய், கனிகள் உண்ணுதலாகும். இதன் மூலம் உடலுக்கு முழுமையான ஊட்டச்சத்து கிடைப்பதுடன், புத்துணர்வும் பெருகும். உடற்கழிவுகளும் நச்சுபொருட்களும் எளிதில் உடலை விட்டு வெளியேற துணை செய்யும்.

ராஜகனி என்று அழைக்கப்படும் எலுமிச்சை உடல்சூட்டை தணிப்பதுடன், நீர்வேட்கையையும் குறைக்கும். இதில் பெரும்பங்கு உள்ள விற்றமின்-சி மற்றும் பிளேவனய்டுகள் பிரி ரேடிகலுக்கு எதிராக செயற்பட்டு, நமது நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தி நுண்ணுயிரி தொற்றில் இருந்து நம்மை பாதுகாக்கும்.

இந்த சமயத்தில் அனைவரும் கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டியது வெள்ளரிக்காய். இதில் 96 சதவீதம் நீர்ச்சத்து உள்ளது. இதன்மூலம் உடலில் உள்ள நச்சுகளை நீக்குவதோடு, ஆரோக்கியத்தையும் மேம்படுத்தி சருமத்திற்கும் பல நன்மைகளையும் தரும். வெப்பத்தால் ஏற்படும் தோல் சிவத்தல், எரிச்சல் போன்றவற்றை நீக்கி சருமத்திற்கு புத்துணர்ச்சியை தரும். கண் கருமை, சுருக்கம், வெயிலால் தோலில் ஏற்படும் கருமை போன்றவற்றையும் நீக்கும். இதிலுள்ள சிலிக்கா நகம் மற்றும் முடி பாதுகாப்பிற்கு பெரிதும் பயன்படும். மேலும் நீரிழிவு நோயாளிகளுக்கும் ஏற்ற உணவாகும்.

வெம்மையில் இருந்து நம்மை பாதுகாக்க நாம் அடுத்தாக எடுத்துக்கொள்ள வேண்டியது தர்பூசணி. இரும்புச்சத்து, விற்றமின் ஏ, சி, பி1, பி6, பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற தாதுகள் இதில் நிறைந்துள்ளன. இதிலுள்ள சிட்ரிலின் இரத்த நாளங்களை விரிவடையச் செய்வதோடு, இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும். நார்ச்சத்தும், நீர்சத்தும் நிறைந்துள்ளதால் மலச்சிக்கலை சரி செய்யும். உடல் உஷ்ணம் குறைந்து மனம் அமைதியாகும்.

மேலும், பழங்களின் அரசனான மாம்பழத்தில் விற்றமின் பி6, ஏ, சி, பொட்டாசியம், மெக்னீசியம் போன்றவற்றை நிரம்பப் பெற்றுள்ளதால், அனைவரும் தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலுள்ள பெக்டின் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்க உதவிசெய்யும் மற்றும் குளூடாமின் அமிலம் ஞாபக சக்தியை அதிகரிக்க துணை செய்கிறது. இதனை முறைப்படி புசித்து வர மனத்தளர்ச்சி, வன்மை குறைவு முதலியன ஒழியும். பஞ்சேந்திரியங்களுக்கு பலம், தெளிவு, சிரசு, முழங்கால்களுக்கு வன்மை, ரோம வளர்ச்சி, நற்றொளி இவை உண்டாகுமென சித்த மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

அடுத்ததாக கடைப்பிடிக்க வேண்டியதில் முக்கியமானது "எண்ணெய்க் குளியல்" ஆகும். நம் முன்னோர்கள் "வைத்தியருக்குக் கொடுப்பதை வாணியருக்குக் கொடு" என்று கூறுவதுண்டு. நோய் வந்து வைத்தியருக்கு செலவு செய்வதைவிட எண்ணெய் பொருள் தயாரிக்கும் வியாபாரிகளிடம் எண்ணெய் வாங்கி குளியல் செய்து வந்தால் நோயில்லாமல் வாழலாம் என்பதே அதன் அர்த்தம். எண்ணெய், முக்கூட்டு நெய், பசு நெய் போன்றவைகளை வாரம் இரு முறை தேய்த்து நீராடி வர எந்த நோயும் அணுகாது.

பெண்கள் வெள்ளி மற்றும் செவ்வாய், ஆண்கள் புதன் மற்றும் சனி ஆகிய இரண்டு நாள்களில் எண்ணெய்க்குளியல் செய்யலாம். எண்ணெய் தேய்த்து குளிக்கும்போது நம் முன்னோர்கள் கூறிய விதிகளையும் பத்தியங்களையும் கடைப்பிடிக்க வேண்டும்.

சித்திரை, வைகாசி மாதங்களில் சூரியன் உதயமான ஐந்து நாழிகைக்குள் அதாவது 2 மணிநேரத்திற்குள் எண்ணெய்க் குளியல் செய்தால் நோயில்லாத தேகம் பெறலாம். எண்ணெய் தேய்க்கும்போது இரண்டு காதுகளிலும் மும்மூன்று துளியும், மூக்கில் இரண்டிரண்டு துளியும் விட்டு பின்பு உச்சி முதல் அனைத்து உடல் அங்கங்களிலும் சூடெழும்பாமல் குளிரத் தேய்க்க வேண்டும்.

இரண்டு காதுகளில் எண்ணெய் விடுவதால் சிரசின் நோயும் கண்களுக்கு தேய்ப்பதினால் செவி நோயும் பாதங்களில் தேய்ப்பதால் கண்களின் நோயும் சிரசிலிட்டு முழுகுவதால் அனைத்து நோய்களும் விலகும்.

தைலம் தேய்த்து கொஞ்சம் ஊறிய பிறகு மாவிலைக் கொழுந்து இரண்டு, மூன்று இட்டு காய்ச்சிய வெந்நீரில் குளியல் பொடி தேய்த்து முழுகலாம். சுத்தமான குளியலுக்கு மணமுள்ள அரைப்பு வேண்டுமானால் பாசிப்பயிறு, வெட்டிவேர், சந்தனம், கோரைக்கிழங்கு, விலாமிச்சம் வேர், கிச்சிலிக்கிழங்கு போன்ற சரக்குகளை சேர்த்திடித்த நலங்குமாவை உபயோகிக்கலாம்.

குளியல் செய்து முடித்தவுடன் உடல் மற்றும் கூந்தலை சிறிதும் ஈரமில்லாமல் உலர்த்த வேண்டும். தலையை உலர்த்தாமல் முடிந்தால் தலைபாரம், தலைவலி, சுரம் உண்டாகக்கூடும். சாம்பிராணி கொண்டு தூபம் போட்டுக் கொண்டால் கூந்தல் சீக்கிரம் உலரும்.

பெண்கள் மஞ்சள் தேய்த்துக் குளித்து வரலாம். அதனால் வெயிலினால் ஏற்படும் வியர்வை, கற்றாழை நாற்றம், முகத்தில் உண்டாகும் நோய்கள் நீங்குமென 'பதார்த்த குண சிந்தாமணி' என்னும் நூல் விளக்குகிறது.

மேலும், இக்காலத்தில் நல்ல காற்றோட்டமான இடத்தில் இருக்க வேண்டும். அதிக புழுக்கம், வியர்வை ஏற்படும்பொழுது மின் விசிறியோடு நாம் பனை, வெட்டிவேர் போன்றவற்றால் செய்த விசிறிகளையும் பயன்படுத்தலாம். வெட்டிவேர் விசிறி தேக எரிச்சல், நீர்வேட்கையை நீக்குவதோடு, மன ஊக்கத்தையும் கொடுக்கும். பனையோலை விசிறி வாத, பித்த மற்றும் கப நோய்களை நீக்கும்.

பொதுவாகவே நாம் மருதாணி இட்டுக்கொள்வது மிகவும் நல்லது. இவ்வெயில் காலத்தில் மருதாணி வைத்துக்கொள்வதால் உடல் வெப்பம் தணியும், மன அழுத்தம் குறையும். நமது கண்ணுக்கு புலப்படாத பல கிருமிகளையும் அழிக்கும் ஆற்றல் மருதாணி இலைக்கு உண்டு. நகங்களில் ஏற்படும் நோய் தொற்றையும் இது சரி செய்யும்.

உடற்பயிற்சியை பொறுத்தவரை அதிகாலையில் மிதமான உடல்பயிற்சியை நல்ல காற்றோட்டமான இடத்தில் செய்யலாம். அளவுக்கு அதிகமாக உடற்பயிற்சி செய்து வந்தால் உடல் அதிக சூடாகி, சோர்வு ஏற்படும். எனவே, தத்தம் வன்மைக்கு அரைபங்குக்கு மேற்படாமல் பயிற்சி செய்ய வேண்டும். மிதமான உடற்பயிற்சிகள் செய்து உடல்வன்மை மற்றும் புத்துணர்ச்சியை பெறலாம்.

வெயிலின் தாக்கத்தை குறைக்க மக்களுக்கு கிடைத்த அரும்பெரும் உணவு நுங்கு. கோடையில் வெயில் கொப்புளம் ஏற்படாமல் தடுப்பதோடு, வயிற்று புண்ணையும் சரி செய்கிறது. மேலும் நுங்கின் நீரை மேல்தடவி வர வேர்குரு மறையும். நுங்கில் விற்றமின் பி, இரும்புச்சத்து, கல்சியம், ஜிங்க், பொட்டாசியம் போன்ற பல்வேறு சத்துகள் நிரம்பி உள்ளன. இதிலுள்ள எந்தோசயனின் மார்பக புற்றுநோய் வராமல் தடுக்க பெரிதும் உதவும். கொழுப்பை கட்டுப்படுத்தி உடல் எடையையும் குறைக்க உதவும். நம் முன்னோர்கள் பின்பற்றிய உணவு மற்றும் வாழ்வியல் முறைகளை நாமும் பின்பற்றி கோடையின் வெப்பத்தை வெல்வோம்.

**(நன்றி – மாலைமலர்)**

## நக்கல் நமசிவாயம்

**தேசத்தைக் காப்பாற்றிய தந்தை ரணிலாம்... அப்படியெண்டா கஞ்சா வளர்த்து பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாமென்று சொன்ன டயானா கமகேயை தேசத்தின் தாய் எண்டு அறிவிப்பாங்களோ..?**



## இன்றைய நாளில்...

- 1868 – செர்பியாவின் இளவரசர் மிகைலோ ஒப்ரெனோவிச் படுகொலை செய்யப்பட்டார்.
- 1869 – பிரித்தானியாவில் பகிரங்க மரணதண்டனை தடைசெய்யப்பட்டது.
- 1886 – மருந்தியலாளர் ஜான் பெம்பர்ட்டன் முதல் தடவையாக கொக்கா கோலாவுக்கான விளம்பரத்தை 'அட்லாண்டா ஜேர்னல்' இதழில் வெளியிட்டார்.
- 1914 – புனித லோரன்ஸ் வளைகுடாவில் எம்ப்ரெஸ் ஒஃப் அயர்லாந்து என்ற அயர்லாந்து ஆடம்பரக் கப்பல் மூழ்கியதில் 1,012 பேர் உயிரிழந்தனர்.
- 1919 – ஐன்ஸ்டைனின் பொதுச்சார்புக் கோட்பாடு ஆர்த்தர் எடிங்டன் என்பவரால் பரிசோதிக்கப்பட்டது. பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது.
- 1964 – அரபு நாடுகள் கூட்டமைப்பு பலஸ்தீனப் பிரச்சினை குறித்து விவாதிக்க கிழக்கு எருசலேமில் கூடியது. இது பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அமைக்க வழிகோலியது.
- 1982 – மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1985 – பெல்ஜியத்தில் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் இடம்பெற்ற கைகலப்பில் அரங்கின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் 39 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.
- 1999 – டிஸ்கவரி விண்ணோடம் சர்வதேச விண்வெளி நிலையத்துடனான தனது முதலாவது இணைப்பை வெற்றிகரமாக முடித்தது.
- 2005 – விடுதலைப்புலிகளைத் தீவிரவாத அமைப்பாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்து தடைசெய்தது.

# மன்னாரில் டெங்கு அபாய வலயங்களில் விஷேட சிரமதான நிகழ்வு முன்னெடுப்பு



(மன்னார்நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக டெங்கு பரவல் அபாயம் அதிகரித்து வருகிறது. இதையடுத்து டெங்கு பரவல் அதிகமாக இனங்காணப்பட்ட பகுதிகளில் விசேட வீட்டுத்தரிசிப்பு மற்றும் சிரமதான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

மன்னார் பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மன்னார் பொலிஸார் மற்றும் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் உப்புக் குளம் வடக்கு, உப்புக் குளம் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள வீடுகள் முழுமையாக சனிக்கிழமை பரிசோதிக்கப்பட்டதுடன் டெங்கு பரவல் தொடர்பில் அக்கறையீனமாகக் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள்,மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊழியர்கள்,மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை அதிகாரிகள்,கடற்படையினர்,மன்னார் பொலிஸார்,கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,பொதுமக்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்

குறித்த சிரமதானம் மற்றும் வீட்டு தரிசிப்பு தொடர்சியாக மன்னார் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் குறிப்பாக, டெங்கு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களில் இடம் பெறவுள்ளதுடன், டெங்கு பரவலுக்கு ஏதுவான காரணிகளுடன் இனம் காணப்படும் வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மூலதனச் சந்தை புதிர்ப் போட்டியில் யாழ்.பல்கலை முகாமைத்துவ பீடத்துக்கு இரண்டு இடங்கள்



இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஆகியன இணைந்து நடத்திய புதிர்ப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

"பல்கலைக்கழக மாணவர்களிடையே மூலதனச் சந்தை தொடர்பான அறிவை விருத்தி செய்வதன் மூலம் முதலீட்டு நடவடிக்கைகளில் தேர்ச்சி பெறுதலும் எதிர்காலத்தை வடிவமைத்தலும்" என்ற தொனிப்பொருளில் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் என்பன இணைந்து நடத்திய மூலதனச்சந்தைப் புதிர்ப் போட்டி (Capital Market Quiz Competition) அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீட அரங்கில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகத்தின் 7 பீடங்களைச் சேர்ந்த 19 அணிகள் பங்குபற்றின. ஒவ்வொரு அணியும் 4 உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்தன.

பீடங்களுக்கிடையிலான போட்டியில் முதலாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட 'ஏ' அணியும், இரண்டாம் இடத்தை பொறியியல் பீட அணியும், மூன்றாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட 'பி'அணியும், பெற்றுக்கொண்டன.

பீடங்களுக்கிடையிலான போட்டியில் வெற்றியீட்டிய அணிகள் அடுத்த மாதமளவில் தேசிய ரீதியில் நடைபெறவுள்ள பல்கலைக் கழகங்களுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழ்.பண்ணை பொலிஸ் சாவடியின் மீது கல்வீச்சு

## ஒருவர் கைது




யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது கல் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்ணைப் பகுதியில் பொலிஸாரின் சோதனைச்சாவடியில் உள்ள கூடாரத்தின் கண்ணாடிகள் மீது சனிக்கிழமை இரவு நபரொருவர் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு கண்ணாடிகளை உடைத்துள்ளார்.

அதனையடுத்து குறித்த நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தான் மது போதையிலேயே கல்லை வீசினேன் எனத் தெரிவித்துள்ளார். குறித்த நபரைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வரணியில் சிவன் ஆலயத்தை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி-குடமியன் பகுதியில் அமைந்துள்ள புராதன சிவன் ஆலயமொன்றை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு ஆலயத்திற்குள் நுழைந்த திருடர்கள் ஆலயத்தில் எழுந்தருளியிருந்த விக்கிரகங்களைத் தகர்த்து அவற்றின் கீழ் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான உலோகங்கள் உள்ளிட்ட பொருட்களைத் திருடிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மன்னார் பிரதேச தமிழரசுக் கட்சியின் கிளை தலைவராக சட்டத்தரணி டினேஸன் தெரிவு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பிரதேச தமிழரசுக் கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை (27) மாலை மன்னார் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது

குறித்த கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்,தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்

இதன்போது 2023 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும் சட்டத்தரணியுமான செ.டினேஸன் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

# மாந்தையில் முதியவர்களுக்கான விஷேட மருத்துவ முகாம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 15 கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் மருத்துவ தேவைகளை நிறைவேற்ற முடியாத 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களின் நலன் கருதி விஷேட மருத்துவ முகாம் இடம்பெற்றது. டெவ்லிங் நிறுவனத்தின் அனுசரணையில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் குறித்த இலவச மருத்துவ முகாம் சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மன்னார் கருங்கண்டல் பாடசாலையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், அருட்தந்தையர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட 15 கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட முதியவர்கள் கலந்து கொண்டனர்.

பல தலைமுறைகளாக எமது தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது மிகவும் பாதிக்கப்படக்கூடிய இந்த சமூகத்தை பாதுகாக்க அனைத்து பங்குதாரர்களும் இந்நேரத்தில் ஒன்றிணைந்து செயல்படுவது மிகவும் முக்கியமானது எனவும் தெரிவித்தார்.







யாழ்ப்பாணம் - அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய (நாவலடி அம்மன்) சோபகிருது வருட மகோற்சவமானது கடந்த (26) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.அதற்கிணங்க நேற்று (28) ஞாயிற்றுக்கிழமை 3ஆம் திருவிழா பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)





கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்துக்குட் பட்ட தெலும்பு கஹவத்தை ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு அதிபர் ஆர்.எப். ரியாஸா தலைமையில் அக்குறணை நகரில் இடம்பெற்றது. (படங்கள் :கண்டி நிருபர்)

## வழிகாட்டல் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்





(சாவகச்சேரி நிருபர்)

இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையினால் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களுக்கு வழிகாட்டல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இப்பயிற்சிநெறியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை(26) காலை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி முதல்வர் ஜெயக்காந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ்,தொண்டர் சபையின் நிர்வாக திட்டமிடல் செயலாளர் ம.அன்பரசன்,தேசிய கண்காணிப்பாளர் வை.ஜெகதாஸ் மற்றும் பொறுப்பாசிரியை திருமதி இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையினால் மாணவர்களுக்கு முதலுதவி,தலைமைத்துவம்,வீதி ஒழுங்கு மற்றும் ஆன்மீகம் ஆகிய துறைகளில்

பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெறுமதியான அந்நியச் செலாவணியை சேமிக்கும் தனது பயணத்தைத் தொடரும் பெல்வத்தை டெய்ரி



பல்வேறு வகையான பால் பொருட்களை உற்பத்தி செய்து பெறுமதியான அந்நியச் செலாவணியைச் சேமித்து வரும் இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமமான Pelwatte Dairy நிறுவனம், கொழும்பு 03 இல் உள்ள அதன் புதிய நிர்வாக அலுவலகத்தை திறந்து வைத்துள்ளது. அனைவராலும் நன்கு அறியப்பட்ட கொழும்பு 03, கொள்ளுப்பிட்டி, காலி வீதியில் அமைந்துள்ள மையப்பகுதியில் அனைவராலும் அணுகக் கூடிய இடத்தில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற அதன் திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றிய பெல்வத்தை டெய்ரி நிறுவனத் தலைவர் ஆரியசீல விக்ரமநாயக்க, பால் உற்பத்தித் துறையில் தனது ஆரம்ப தொழில் முயற்சியை நினைவுகூர்ந்தார். "பெல்வத்தையை கட்டியெழுப்பும் போது, நான் எனக்காக வியர்வை சிந்தவில்லை. தமது உற்பத்திகளுக்கு நியாயமான விலை கிடைக்காமல் போராடும் எமது பால் பண்ணையாளர்களுக்காகவே பாடுபட்டேன். எமது விவசாயிகளுக்கு ஒரு சிறந்த வாழ்க்கைத் தரத்தை பெற்றுத் தருவதற்காக நான் உழைத்த வேளையில், ஒரு எளிய மற்றும் முக்கியமான தொலைநோக்கு பார்வையினால் உந்துதளிக்கப்பட்டேன். பால் உற்பத்தியில் இலங்கையை தன்னிறைவு அடையச் செய்வதும் நாட்டில் வெளிநாட்டு விநியோகங்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதும் அதன் மூலம் பெறுமதியான அந்நியச் செலாவணியைச் சேமிப்பதுமே அதுவாகும்.

இந்த தொலைநோக்குப் பார்வையால், நிறுவனம் வளர்ச்சியடையத் தொடங்கியது. மேலும் எமது உயர்தர பால் பொருட்கள் மற்றும் சந்தையில் போட்டித்தன்மை வாய்ந்த விலை நிர்ணயம் காரணமாக, பெல்வத்தை வர்த்தகநாமத்தினால் தொடர்ந்தும் முன்னேற முடிந்தது. Pelwatte Dairy Industry Ltd (PDIL) குடும்பத்தின் கடின உழைப்பு மற்றும் அதன் அர்ப்பணிப்பு ஆகியன நிறுவனத்தை மிக பலமான இடத்தை நோக்கி கொண்டு சென்றன. இதன் விளைவாக, பெல்வத்தை இன்று இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமமாக மாறியுள்ளது. பெல்வத்தை, அதன் வளர்ச்சிப் பாதையில் செல்லும் நேரத்தில் அதை மேலும் முன்னோக்கி செலுத்துவதற்காக அதன் இளம் ஊழியர்களை மேம்படுத்துவதில் அது கவனம் செலுத்துகிறது. அது போன்றே இன்றைய பெல்வத்தையில், பல முக்கிய செயற்பாடுகளை பெல்வத்தை குடும்பத்தின் இளைஞர்கள் முன்னெடுத்து வருவது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன். பெல்வத்தையின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்றார்.

பெல்வத்தை டெய்ரியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அக்மல் விக்ரமநாயக்க தெரிவிக்கையில், "பெல்வத்தையை அதன் தற்போதைய தரத்துக்குக் கட்டியெழுப்புவதற்காக வழங்கப்பட்ட கடின உழைப்பு மற்றும் பெல்வத்தை குடும்பத்தின் அர்ப்பணிப்பு இல்லாவிட்டால், அது இன்றைய நிலைக்கு வந்திருக்காது. பெல்வத்தையின் ஊழியர்களின் குழுவாக இயங்கும் தன்மை மற்றும் அவர்களது அர்ப்பணிப்பு காரணமாக, சில நேரங்களில் தங்களது வேலை நேரம் மற்றும் பாத்திரங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக எமது ஊழியர்களிடையே காணப்படும் அர்ப்பணிப்பு மற்றும் குழுவாக இயங்கும் தன்மையின் காரணமாக நாட்டில் கொவிட் முடக்கம் நிலவிய காலத்தில் அனைத்துப் பணிகளும் சுமூகமாக இடம்பெற்றன. பால் என்பது எல்லா வயதினரும் தினமும் பல முறை உட்கொள்ளும் ஒரு பொருளாகும். மேலும், வெவ்வேறு நுகர்வோர் பிரிவுகள், வெவ்வேறு கொள்வனவு முறைகளின் அடிப்படையில் பல்வேறு பால் பொருட்களுக்கான கோரிக்கைகள் காணப்படுகின்றன. இதன் விளைவாக, எமது தயாரிப்பு வகைகளில் உள்ள வெவ்வேறு தயாரிப்புகளை ஒவ்வொரு வாடிக்கையாளர் பிரிவுக்கும் பொருத்தமாக கொண்டு சேர்ப்பதே பெல்வத்தையின் வெற்றியை உறுதி செய்துள்ளது. இதில் எனது பங்காக, எமது தயாரிப்பு வகைகளுடன் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பொருந்தச் செய்யும் செயன்முறையை ஏற்படுத்த முடிந்ததுடன், எமது குழுவின் ஆதரவுடன் அதனை விநியோகிக்கவும் முடிந்தது. நாட்டின் முடக்க காலத்தில் பால் பொருட்களின் தேவை தொடர்ந்து அதிகரித்ததன் அவசியத்தை உணர்ந்து, உற்பத்தியின் அளவை உச்சபட்சமாக விரிவுபடுத்தி சந்தை தேவையை பூர்த்தி செய்வதில் நாம் வெற்றியடைந்தோம்.

Pelwatte Dairy நிறுவனத்தின் புதிய நிர்வாக அலுவலகம், இல 234, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03 இல், அனைவராலும் நன்கு அறியப்பட்ட காலி வீதியிலிருந்து ஒரு திருப்பத்தில் அமைந்துள்ளது. கடந்த பெப்ரவரி 02 ஆம் திகதி இடம்பெற்ற அதன் திறப்பு விழா நிகழ்வில், பெல்வத்தை நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர், விநியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அதன் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வீதியோரத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர் மீது வாகனம் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி வல்லை பருத்தித்துறை பிரதான வீதியில், நேற்றுமுன்தினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்த கப் ரக வாகனம் மோதியே மேற்படி அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் சீனியர் சந்திரகாந்தன் (56 வயது)என்பவரே உயிரிழந்துள்ளார். சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பாவனைக்குதவாத அரிசி மக்களுக்கு விநியோகம்; களஞ்சியசாலை சீல் வைப்பு

## வவுனியாவில் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை



வவுனியா, கூமாங்குளம் கிராம சேவை அலுவலகத்தில் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த அரிசி பாவனைக்குதவாத நிலையில் சுகாதாரப் பரிசோதகர்களினால் கண்டுபிடிக்கப்பட்டு குறித்த அரிசி களஞ்சியசாலை சீல் வைக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு அரிசி வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் கூமாங்குளம் கிராம சேவை அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஒப்பந்ததாரரினூடாக வவுனியாவிலுள்ள பிரபல அரிசி ஆலையொன்றிலிருந்து கடந்த 26 ஆம் திகதி காலை 4860 கிலோ அரிசி பெற்றுக்கொள்ளப்பட்டு குறித்த அரிசி பைகள் மக்களுக்கு அன்றைய தினமே விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட அரிசி பாவனைக்குதவாத நிலையில் காணப்பட்டுள்ளது.இவ்விடயம் தொடர்பாக பயனாளிகள் சுகாதார பிரிவினருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து கூமாங்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்துக்குச் சென்ற சுகாதாரப் பிரிவினர் குறித்த அரிசியை பரிசோதித்ததுடன் அவை பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதை உறுதிப்படுத்தியதுடன் கடந்த 26 ஆம் திகதி அலுவலகத்தின் களஞ்சியசாலைக்கும் சீல் வைத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் குறித்த கிராம சேவையாளரிடம் வினாவிய போது,

மக்களுக்கு அரிசி வழங்குவதற்காக குறித்த அரிசி மூடைகள் அரசாங்கத்தின் ஒப்பந்ததாரரிடமிருந்து காலையே எமக்கு கிடைக்கப்பெற்றது. அரிசி கிடைக்கப்பெற்று சில மணித்தியாலங்களுக்குள்ளேயே மக்களுக்கு அதனை பகிர்ந்தளித்தோம். ஆனால் அவை பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதாக மக்கள் சுகாதார பிரிவினருக்குத் தகவல் வழங்கியிருந்தமையுடன் சுகாதார பிரிவினர் களஞ்சிய சாலையை சீல் வைத்தனர். இந்நிலையில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரிசியை மீளப்பெறும் நடவடிக்கையை கிராம அபிவிருத்தி சங்கத்தினர் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

# கொழும்பில் அஞ்சலி செலுத்த நல்லிணக்க தூபி

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்காக கொழும்பில் நல்லிணக்க தூபி ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி சாதகமான நிலைப்பாட்டில் இருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் .

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 1983 -2008 உள்நாட்டு இறுதி யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், இன, ம, மொழி பேதங்களுக்கு அப்பால் பலர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களை ஒன்றாக நினைவு கூருவதற்கு ஒரு நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சரவையில் முன் வைத்தேன்.

எனது கோரிக்கையை ஜனாதிபதி சாதகமாகப் பரிசீலித்த நிலையில், கொழும்பில் நினைவுத் தூபியை அமைப்பதற்கான இடத்தை அடையாளப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைப்பதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சாதகமான பதிலையிட்டு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில், இன, மத, மொழி வேறுபாடுகளை களைந்து அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி காணப்படுகிறார். நாட்டிலுள்ள பயங்கரவாதத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை ஆதரித்தேன். அதனை அவர் நிறைவேற்றினார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது அவருக்கு நான் வெளிப்படையாகவே எனது ஆதரவைத் தெரிவித்தேன்.

ஏனெனில், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லக்கூடிய ஆளுமை அவரிடமே காணப்படுவதை உணர்ந்து எனது வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்தேன்.

அவர் ஜனாதிபதியாகவுள்ள நிலையில் மக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்வதற்கு எந்தத் தடையும் மேற்கொள்ளப்படவில்லை .

போராட்டத்தின்போது இந்த நாட்டில் பல்வேறு இளைஞர், யுவதிகள் கட்சி சார்ந்து, அரசியல் குழுக்கள் சார்ந்து செயற்பட்டு உயிரிழந்துள்ள நிலையில் அவர்களையே நினைவு கூருவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கு ஜனாதிபதி நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய நிலையில், எதிர்காலத்தில் அனைத்து இன மக்களும் சார்ந்து நினைவேந்தல்களை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமென நம்புகிறேன்.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ்க் கட்சிகள் இதயசுத்தியுடன் அவரின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.





வத்துகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பன்வில இராஜசிங்க மகா வித்தியாலய மாணவர்களது புத்தாக்கங்களை வெளிக் கொணரும் கல்வி, கலாசார கைத்தொழில் கண்காட்சி கடந்த மூன்று தினங்களாக அதிபர் மேஜர் ஏ.கே. சமரகோன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ . கமகே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

(படங்கள்:கண்டி நிருபர்)

# கிணற்றுக்குள் விழுந்து சிறுமி உயிரிழப்பு

## மிருசுவில் பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி நிருபர்)

பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்து ஆறு வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த ச.சிம்சிகா (06 வயது) என்ற சிறுமியே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சிறுமியை சில மணிநேரமாகக் காணாத நிலையில் உறவினர்கள் இணைந்து தேடியுள்ளனர். இதனையடுத்து வீட்டுக்கு அருகேயிருந்த பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்திருந்த சிறுமி மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிறுமி ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



ஒருகொடவத்தை அருள்மிகு ஸ்ரீ மகா பத்திரகாளி அம்மன் ஆலய கொடியேற்ற விழா வியாழக்கிழமை இடம்பெற்றது.சிவாச்சார்யாமணி வைத்திநாத வைகுந்த சிவாச்சாரியார், ஆலய நிர்வாகத் தலைவி ஏ. நல்லம்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.(படங்கள்: எம்.நசார);



க.பொ.த.(சா.த) பரீட்சையை முன்னிட்டு,ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயம், உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் என்பவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆசி வேண்டி விஷேட பூஜை உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்றது.இதன்போது மாணவர்களுக்கு தொழிலதிபர் நர்த்தணகேஷன் பேனாக்கள் வழங்கிவைத்தார்.

(படம் :உடப்பு செய்தியாளர்)



மலையகம் 200 ஆவது நிகழ்வை முன்னிட்டு பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி நடத்திய சுயதொழில் முயற்சியாண்மையாளர்களை உருவாக்கும் வேலைத் திட்டடம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு கண்டி ரிவடெல் ஹோட்டலில் மேற்படி முன்னணியின் தலைவர் பி. லோகேஸ்வரி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம வளர்வாளர்ராக கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தின் இயக்குநர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம், பெண்களது அரசியல் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (படங்கள்:இக்பால் அலி)

# இலங்கைக்கு இந்தியா எப்போதும் ஒத்துழைப்பும் நல்லாதரவும் வழங்கும்

## இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பக்லே



(இக்பால் அலி

இந்தியாவின் நேச நாடு இலங்கை. இந்நிலையில், இந்தியா மலையக மக்களுக்கான வீடமைப்பு, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுத்து வருகின்றது என்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பக்லே தெரிவித்தார்.

கண்டியில் உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆரம்பிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட புதிய சின்னம் அறிமுக நிகழ்வு கண்டி மஹாவலி ரிச் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் கலாநிதி ஏ. ஆதிரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிகழ்நிலையூடாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, இந்தியாவின் நட்பு நாடாகும். இந்நிலையில், மலையக மக்களுக்கான வீடமைப்பு, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுத்து வருகிறது. மலையகம் 200 ஆவது ஆண்டு நிகழ்வைக் கொண்டாடும் இத்தருணத்தில் மலையக மக்களுக்கும் இலங்கைக்கும் இந்தியா எப்போதும் ஒத்துழைப்பையும் நல்லாதரவையும் வழங்கும் என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார், மத்திய மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் துரை மதியுகராஜா, உதவி உயர் ஸ்தானிராலயத்தின் இரண்டாம் செயலாளர் பி. சோமராஜ் உள்ளிட்ட முக்கிய உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



வத்தளை,ஹுணுப்பிட்டிய அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமரன் ஆலயத்தின் வருஷாபிஷேக அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவ ஸ்ரீ சி.சோதிரத்தினக் குருக்கள் தலைமையில் வசந்த மண்டப பூஜை இடம்பெற்று சுவாமிகள் உள்வீதி வலம் வருவதையும் ஆலய பரிபாலன சபையின் தலைவர் டீ.கனகேஷ்வரன் மற்றும் பக்தர்கள் கலந்துகொண்டதையும் படங்களில் காணலாம். கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகிய திருவிழா தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறும்.

# இடிந்து விழும் அபாய நிலையிலுள்ள கன்னங்குடா பாலம்

## புனரமைத்து தருமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம்

(கனகராசா சரவணன்)







மட்டக்களப்பில் அபிவிருத்தி என்ற போர்க்கொடியை தூக்கியிருக்கும் இரண்டு அமைச்சர்களும் ஏமாற்றி விட்டதாகக் குற்றம் சுமத்தி, இடிந்து விழும் நிலையிலுள்ள வவுணதீவு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கன்னங்குடா பாலத்தையும் அந்தப் பகுதி வீதியையும் புனரமைத்து தருமாறுகோரி பிரதேச மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து, பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது "வாக்குகளை பெற்று மக்களை ஏமாற்றாதே, கன்னங்குடா மக்கள் மக்கள் இல்லையா, தேர்தல் காலத்தில் மக்களிடம் வாக்குறுதி பின்னர் மக்களும் இல்லை வாக்குறுதி கொடுத்தவர்களும் இல்லை'' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 1978ஆம் ஆண்டு போடப்பட்ட இந்த பாலம் தற்போது இடிந்துவிழும் நிலையில் உள்ளது. இதன் ஊடாக மக்கள் நாளாந்தம் அச்சத்தின் மத்தியில் பிரயாணிக்கின்றனர். குறித்த பிரதேச பகுதிகளில் வசிக்கும் சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் இந்த பாலத்திலிருந்து கறிஞ்சாமுனை வரையிலான 900 மீற்றர் கொண்ட வீதி ஊடாக தினமும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பிரயாணித்து வருகின்றனர். இந்த வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் பிரயாணிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த பாலம் உடைந்து விழும் அபாயகரமான நிலையிலுள்ளது. இது தொடர்பாக தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் வாக்கு கேட்டுவரும்போது வாக்குறுதிகளை வழங்கிவிட்டு வாக்குகளை பெற்ற பின்னர் இங்கு வருவதில்லை. அதேவேளை, 2020 அபிவிருத்தி குழு இணைத்தலைவராக இருந்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனிடம் சென்றோரிடம் குறித்த பாலத்தினை உடனடியாக புனரமைப்பதாக தெரிவித்துள்ளார். பின்னர் அவர் பதவி போனதும் அதன் பின்னர் வந்த தற்போதைய அபிவிருத்திக் குழு தலைவரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைவருமான இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனிடம் தெரிவித்தபோது, மிக விரைவில் புனரமைத்து தருவதாக தெரிவித்தார். ஆனால் ஒன்றும் இடம்பெற்றதாக இல்லை.

கடந்த 2020ஆம் ஆண்டு எங்கள் மக்களிடம் போலி வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளை அபகரித்தவர்கள் அபிவிருத்தி செய்யவில்லை. எங்கள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் சுபபோக வாழ்க்கை வாழ்கின்றனர்.

தொள்ளாயிரம் மீற்றர் வீதியை ஒரு அமைச்சர் செய்ய முடியாது என்றால் எங்களுக்கு அவமானம். மட்டக்களப்பில் இப்படி ஒரு அமைச்சர் இருந்து இந்த சிறிய பாலத்தைக்கூட செய்யமுடியாதவர்கள் எதிர்காலத்தில் எப்படி எங்களிடம் வாக்குகளை கேட்கப்போகின்றீர்கள் என எங்களுக்கு அவமானமாக உள்ளது.

எனவே, உடனடியாக இந்த பாலத்தையும் வீதியையும் புனரமைத்து தருமாறு கோரி சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்னர்.

## தென்கிழக்குப் பல்கலையில் தொற்றா நோய் பரிசோதனை





(பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு செய்தியாளர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைவாக தொற்றா நோய்த்தடுப்பு வாரத்தினை முன்னிட்டு தொற்றா நோய் தொடர்பான பரிசோதனைகளும் ஆலோசனைகளும் வழங்கும் நிகழ்வு பல்கலைக்கழக வளாகத்தில் வெள்ளிக்கிழமை(26) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைவாக இடம்பெற்ற இந்நிகழ்வில் தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ்.இர்சாத் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தென்கிழக்குப் பல்கலையின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் செய்யப்பட்ட இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைவாக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களின் இணைப்பாளராக செயற்படும் வைத்தியர் எம்.எச்.சரூக் கலந்து கொண்டதுடன் குறித்த நிகழ்வுகளை மேற்பார்வை செய்தமையும் குறிப்பிடத்தக்கது.





நியூட்டன் விளையாட்டுக் கழகம் பொது மக்களுடன் இணைந்து நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் சனிக்கிழமை(27) செட்டிப்பாளையம் பிரதேச வைத்திய சாலையில் இடம்பெற்றது. இதன்போது கிராம மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்த குறித்த இரத்ததான முகாமில் இயற்கை வளங்களை பாதுகாக்கும் வண்ணம் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.






கிழக்கு மாகாணத்தின் கடற்கரைகளை ஆசிய கண்டத்தின் அழகான மற்றும் தூய்மையானதோர் கடற்கரைகளாக மாற்றுதல் எனும் திட்டத்தின் கீழ் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை ஏற்பாடு செய்திருந்த மாபெரும் சிரமதானப் பணி சனிக்கிழமை(27) ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இதன்போது மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அரச அலுவலகங்களின் பிரதானிகள் கலந்து கொண்டனர். (அப்துல்சலாம் யாசீம்)

## அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ காத்தான்குடி பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு விஜயம்





(காத்தான்குடி செய்தியாளர்)

அரசாங்கத்தின் பிரதேச கிராம சேவகர் பிரிவுகளில் 'சகவாழ்வு சங்க உருவாக்கத்தினூடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்' எனும் வகையில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, செயலாளர் அனுராதா ஜெயரத்ன உள்ளிட்ட குழுவினர் காத்தான்குடி பெரிய ஜும் ஆப் பள்ளிவாசலுக்கு சனிக்கிழமை(27) விஜயம் செய்திருந்தனர்.

குறித்த நிகழ்வானது பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் கே.எல்.எம்.பரீட் தலைமையிலும் பிரதம பேஷ் இமாம் அஷ்-ஷெய்க் அல்ஹாபிழ் எம்.எம்.எம்.இல்ஹாம் (பலாஹி) நெறிப்படுத்தலிலும் நடைபெற்றது. இதன்போது சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.உவைஸ் கலந்துகொண்டிருந்தார்.

பள்ளிவாசல் கட்டடக்கலை பற்றியும் சகவாழ்வு சமூக நல்லிணக்கத்தை பள்ளிவாசலூடாக கட்டியெழுப்பப்படுவதையும் சுட்டிக்காட்டினார். அனைத்து நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பள்ளிவாசல் சுற்றுப் பயணக்குழு உறுப்பினர்களின் முழுமையான பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதி அமைச்சர் விசேட உரை நிகழ்த்தியதுடன் நிர்வாக உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். மேலும் அரபு மொழியில் அவரது பெயர் எழுதப்பட்டு ஞாபகார்த்த சின்னம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைய, மட்டக்களப்பு மாநகர சபையினால் கல்லடி கடற்கரையினை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் சனிக்கிழமை(27) முன்னெடுக்கப்பட்டது. மாநகர சபை ஆணையாளர் நா.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (கல்லடி செய்தியாளர்)

'தூய்மையான கடற்கரை' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்வு நிந்தவூர் கடற்கரைப் பூங்கா முன்றலில் சனிக்கிழமை(27) முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் எண்ணக்கருவுக்கமைய, நிந்தவூர் பிரதேச சபை செயலாளர் திருமதி ரி.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற சிரமதானப் பணியின்போது பாராளுமன்ற உறுப்பினர் எம்.பைசால் காசிம், பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லதீப், பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.அன்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். (எருவில் செய்தியாளர்)



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com





கிழக்கு மாகாண ஆளுநரின் எண்ணக்கருவுக்கமைய, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாணத்தின் சகல கடற்கரை பிரதேசங்களையும் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் சனிக்கிழமை(27) காலை கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை ஏற்பாட்டில் பாசிக்குடா கடற்கரையில் இடம்பெற்றது. இதன்போது கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் எஸ்.நவநீதன், கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.சந்திரகுமார, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை பாசிக்குடா பொறுப்பாளர் எம்.எச்.மாகிர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.யசோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைய, மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களை தூய்மையான பிரதேசங்களாக மாற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்முனை கடற்கரை பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்வு சனிக்கிழமை(27) ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் ஒத்துழைப்போடு கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ஆர்.எம்.அஸ்மியின் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தில் மாநகர சபை உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (பெரியநீலாவணை, சாய்ந்தமருது செய்தியாளர்கள்)





திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் காணாமல்போன ஆட்கள் பற்றிய விசாரணை தொடர்பான நடமாடும் சேவை ஞாயிற்றுக்கிழமை(28) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது காணாமல்போன உறவுகள் தங்களது சாட்சிகளோடு காணாமல் போனோர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

இதில் கிண்ணியா, கந்தளாய், தம்பலகாமம் ஆகிய பிரதேச பகுதிகளை உள்ளடக்கியவர்களில் சுமார் 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சாட்சியங்களை வழங்கினர். காணாமல்போன அலுவலக உயரதிகாரிகள், தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)





கிழக்கு மாகாண ஆளுநரின் வழிகாட்டலில் அட்டாளைச்சேனை பிரதேச சபை ஏற்பாடு செய்த மாகாண மட்டத்திலான கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் சிரமதான நிகழ்வு சனிக்கிழமை(27) அட்டாளைச்சேனை – பாலமுனை கடற்கரை பிரதேசத்தில் இடம்பெற்றது. பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தார். இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.இஸ்மாயில், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (திகாமடுல்ல செய்தியாளர்)

# கல்முனை பிரதேச செயலக விவகாரம்: நிந்தவூரில் விசேட கலந்துரையாடல்

## உபகுழு அமைத்து பிரச்சினைகளை ஆராய முஸ்தீபு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிலும் குறிப்பாக, கல்முனை விவகாரம் தொடர்பில் ஆராயும் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன விஷேட கூட்டம் சனிக்கிழமை(27) சம்மேளனத் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் வலுப்படுத்தும் நோக்கில் செயற்பட்டுவரும் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்தையும் பற்றிக் கலந்துரையாடியதுடன் கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்துக்கான தீர்வை எட்டும் வகையில் உபகுழுவொன்றையும் நியமித்துள்ளது.

அந்த உப குழு கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்தில் உள்ள விடயங்களைக் கையாளவுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் அதிக முஸ்லிம்கள் வாழும் நகரம் என்ற அடிப்படையிலும் இலங்கை முஸ்லிம்களின் முகவெற்றிலையாக கல்முனை அமைந்துள்ளது என்ற அடிப்படையிலும் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள், குடியிருப்புகள் நிறைந்துள்ள கல்முனையின் இந்த விடயத்தை சிறப்பாகக் கையாண்டு உரியவர்களிடம் இருந்து தீர்வைப் பெறுவதற்கன முயற்சிகளையும் மேற்கொள்ளத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



மற்றுமொரு தீர்மானமாக தமிழ் மக்கள் கூடுதலாகவும் முஸ்லிம்கள் குறைவாகவும் வாழும் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களில் முஸ்லிம்களுக்கு இடம்பெறும் அநீதிகள், பாரபட்சங்களை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், அமைச்சின் செயலாளர்கள், அமைச்சர்கள், உரிய அதிகாரிகளுக்கு எடுத்துரைத்து உரிய தீர்வைப் பெற இந்த உபகுழு செயற்படத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சம்மேளன செயலாளர் ஏ.எல்.அன்வர்டீன், பொருளாளர் எஸ்.எம்.சபீஸ், உறுப்பினர்கள், உலமாக்கள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மாணவி மீது பாலியல் சேஷ்டை

## 19 வயது இளைஞன் கைது

(திகாமடுல்ல செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மாணவியை வீதியில் வழிமறித்து பாலியல் சேஷ்டை புரிய முயன்றமை மற்றும் மாணவியை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் 19 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மஜீட் தெரிவித்தார்.

சனிக்கிழமை (27) மாலை பிரத்தியேக வகுப்புக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவியிடமே சந்தேக நபர் பாலியல் சேஷ்டை புரிய முயன்றுள்ளார்.

குறித்த மாணவி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு மாணவியின் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, சம்பந்தப்பட்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

இதேவேளை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு வீதிகளில் தொந்தரவு செய்பவர்களைக் கைது செய்வதற்கு விஷேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இவ்வாறான சம்பவங்களினால் மாணவிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு, சிலர் தமது கல்வியை இடைநடுவில் கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக, உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் முடியும் நேரங்களில் விஷேட போக்குவரத்துப் பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தி இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கண்டறிந்து கைது செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்குக்கு விரைவில் விமான சேவைகள்

## அமைச்சர் நிமல் – ஆளுநர் செந்தில் கலந்துரையாடலில் தீர்மானம்



கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் முதலீடுகளை மேம்படுத்தும் வகையில் முன்னுரிமையளிக்கும் வகையில் விமான சேவையை உடனடியாக ஆரம்பிப்பது குறித்து சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குமிடையில் விஷேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் இரண்டு விமான நிலையங்கள் மற்றும் பல கடல் விமானங்கள், இறங்கும் தளங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளமை குறித்து அமைச்சரின் கவனத்துக்கு ஆளுநர் கொண்டுவந்ததையடுத்து விமான சேவைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதியளித்தார். இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர், சுற்றுலாப் பணியகம், விமானப்படை, Cinnamon Air, Fits Air மற்றும் ஏனைய தனியார் சேவையாளர்களும் கலந்துகொண்டனர்.

மேலும், cinnamon Air தனது விமானச் சேவையை ஜூலை மாதத்திலிருந்து ஆரம்பிப்பதாக உறுதியளித்தது. அதை ஊக்குவிக்க கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் தனது முழுமையான ஆதரவை அளிப்பதாகத்தெரிவித்தது.

## போடியார் புலம்பல்!



தமிழரசுக்கட்சித் தலைவர் பதவியை ஏற்கத்தயாராம் என்று சீ.வி.கே.சிவஞானம் சொல்லியிருக்காரு எலுவா.? ஆருட்டக்குடுத்தாலும் ஏற்பாங்கதான். ஆனா சிவஞானத்தாருக்கு மாவையரு குடுக்கோணுமே. இப்ப ஒரு கோதாரியா கிடக்கு தமிழரசுக்கட்சிக்கு தலைவர் ஆரு எண்டதில பெரிய போட்டி.. பேசாம துண்ட குலுக்கிப்போட்டு திருவுளச்சீட்டு மூலம் தெரியலாம் இல்லாட்டி ஆரு கட்சிக்கு கூட காசி தாறங்களோ அவங்கதான் தலைவர் எண்ட போட்டிய வச்சா நல்லம் எலுவா?

# நீதியமைச்சின் நடமாடும் சேவையில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு



(மட்டக்களப்பு)

நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட மாபெரும் நடமாடும் சேவை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் சனிக்கிழமை(27) காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்றது.

சகல அமைச்சுகளும் திணைக்களங்களும் பங்கேற்று மக்களுக்கு சேவை பெற்றுக்கொடுக்கும் இம்மாபெரும் நடமாடும் சேவை தொடர்பான அறிமுகத்தை நீதி அமைச்சின் ஒருங்கிணைப்புப் பிரிவின் மேலதிக செயலாளர் ஆர்.பி.எஸ்.சமன்குமார் வழங்கினார்.

இதன் ஆரம்ப நிகழ்வில், வர்த்தக இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா உட்பட சகல அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

மாவட்ட மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மற்றும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு புலம்பெயர்ந்து மீண்டும் நாடு திரும்பிய மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் பிரச்சினைகள் போன்றவற்றுக்கு ஒரே நாளில், ஒரே இடத்தில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான மாபெரும் நடமாடும் சேவையாகவே இது இடம்பெற்றது.

இதன்போது நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம், தலைமைப் பதிவாளர் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம், மத்தியஸ்தசபை ஆணைக்குழு மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு போன்றவற்றின் சேவைக் கூடங்கள் தமது சேவைகளை வழங்கின.

இந்நடமாடும் சேவையில் குடியுரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு, பிறப்பு, விவாகம், இறப்புச் சான்றிதழ்கள் பதிவு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு, தேசிய அடையாள அட்டைகளை பெறுதல், திருத்தம் மற்றும் காணாமல் போன அடையாள அட்டைகளுக்கான இரண்டாவது பிரதி ஒன்றை வழங்குவது தொடர்பான சேவைகள், காணி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு, இழப்பீடுகளுக்கான நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக விண்ணப்பித்தவர்களின் கோவைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பூர்த்தி செய்தல், காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்துதல் மற்றும் அந்த விசாரணைகளுக்குத் தேவையான ஆவணங்களைப் பூர்த்தி செய்தல், மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல், காணி தொடர்பாக விஷேட மத்தியஸ்த சபை தொடர்பான விழிப்புணர்வு, சட்ட ஆலோசனை போன்ற சேவைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாற்றுமேடை உற்பத்தியாளர்களுக்கான விழிப்புணர்வு

(மட்டக்களப்பு செய்தியாளர்)

நாற்று மேடை உற்பத்தியாளர்களுக்கான தொழில்நுட்ப விழிப்புணர்வுக் கருத்தரங்கு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (25) நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் விவசாயத் திணைக்களத்துக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக, நாற்றுமேடை அமைத்து நாற்றுகள் விற்பனை செய்யும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளரின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.



இதில் மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, தெற்கு உதவி விவசாய வலயப் பணிப்பாளர் சி.சித்திரவேல் மற்றும் களுவாஞ்சிக்குடிப் பிரிவு விவசாயப் போதனாசிரியர்கள், விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலையத்தின் பொறுப்பதிகாரி மற்றும் நாற்றுமேடை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 13மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை எதிர்பார்ப்பு

## பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ராஜகோபாலசிங்கம்

(புளியந்தீவு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட சிறுபோக நெற்செய்கை 35ஆயிரம் ஹெக்டேயரில் பயிரிடப்பட்டுள்ளது. இதன்போது 13 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடையை எதிர்பார்த்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் வி.ராஜகோபாலசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தென்பகுதி விவசாயிகளுக்கான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை கடுக்காமுனையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையானது சிரமங்கள் நிறைந்தது. இது வழமையாக இருந்தபோதிலும், இந்த வருடத்தில் சிரமங்களோ தொந்தரவுகளோ சிறுபோக நெற்செய்கையாளர்களுக்கு இருக்கவில்லை. சிறுபோக விவசாயிகள் நீர்ப்பாசனம் பெறுவதில் அசௌகரியத்தை எதிர்நோக்குவர். ஆனால், இந்த வருடத்தில் அது இடம்பெறவில்லை. போதியளவு நீர் குளங்களில் இருந்தமையாலும் எதிர்பாராத மழைவீழ்ச்சி கடந்த மாதத்தில் எமது மாவட்டத்துக்கு கிடைத்தமையாலும் எமது விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனத் தட்டுப்பாடு இருக்கவில்லை.

அதேபோல், நெற்பீடைகளும் விவசாயத்தை பெரிதாகத் தாக்கவில்லை. இது விவசாயிகளுக்கு இலாபத்தை ஈட்டித்தரும். எமது விவசாயிகளால் 35ஆயிரம் ஹெக்டேயர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை இடம்பெற்றிருக்கிறது. இன்னும் ஒருமாதத்தில் நெல் அறுவடை இடம்பெறவுள்ளது. அது 13 மில்லியன் மெற்றிக்தொன்னைத் தாண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம் - என்றார்.

# காட்டு யானையால் வீடுடைத்து சேதம்



(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் வான்-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜயந்திபுர பகுதியில் காட்டு யானைகள் வெள்ளிக்கிழமை(26) அதிகாலை வீடொன்றை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக ஜயந்திபுர பகுதியில் யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள், வீட்டிலுள்ளோருக்கு எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படாதபோதிலும் வீட்டின் ஒரு பகுதியை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாகவும் சமையல் பாத்திரங்களை எடுத்து வீசியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து வன ஜீவராசி அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளதாகவும் யானை பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டும் எவ்வித பயனுமில்லையெனவும் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளரொருவர் தெரிவித்தார்.

# கரடிக்குளம் வீதியை புனரமைத்துத் தரக் கோரிக்கை

(அப்துல்சலாம் யாசீம்)

அநுராதபுர மாவட்டம் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடிக்குளம் செல்லும் வீதி பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமலிருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஹொரவப்பொத்தானை நகரிலிருந்து 12 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது இந்தக் கிராமம். விவசாயம் மற்றும் சேனைப்பயிர்ச்செய்கை போன்றவற்றை பிரதான தொழிலாகக் கொண்டுள்ள இக்கிராம மக்கள் குறித்த வீதியினூடாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குண்டும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியானது அவசரமாக நோயாளர்களை அழைத்துச் செல்லக்கூட முடியாத நிலையில் காணப்படுவதுடன் கர்ப்பிணித் தாய்மார்களும் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருவதாகவும் அக்கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் இப்பிரதேச மக்களின் நலன் கருதி ஹொரவப்பொத்தானை, கரடிக்குளம் பிரதான வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# பரீட்சை நிலையங்களில் டெங்கு பரிசோதனை

(பாண்டிருப்பு செய்தியாளர்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அவற்றை சீர்செய்யும் நடவடிக்கையில் பிராந்திய சுகாதார வைத்திய பணிமனைகள் ஈடுபட்டு வருகின்றன.

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையிலுள்ள பாடசாலைகளில் டெங்கு பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் இப் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலைகளின் சுற்றுப்புறங்கள், மலசலகூடங்கள், மழைநீர் தேங்கி நிற்கும் இடங்கள், பரீட்சை மண்டபங்கள் ஆகியன பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் பாடசாலை அதிபர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு டெங்கு நுளம்பு பெருக்கம் தொடர்பான அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் சுனனுத் திர்மிதி பாராயணம் நிகழ்வு ஆரம்பம்

(சீனக்குடா செய்தியாளர்)

கிண்ணியா சுனனுத் திர்மிதி சங்கம் ஏற்பாடு செய்துள்ள 23ஆவது வருட சுனனுத் திர்மிதி பாராயண நிகழ்வு சனிக்கிழமை(27) ஆரம்பமானது. நபிகள் நாயகம் முஹம்மது நபியவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய சுனனுத் திர்மிதி கிரந்தம் தினமும் காலை சுபஹ் தொழுகைக்குப் பின்னரும் மாலை மஃரிப் தொழுகைக்குப் பின்னரும் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றது.

பல உலமாக்கள் இதில் பங்களிப்புச் செய்து வருகின்றனர். இதன் இறுதி தமாம் நிகழ்வு ஜூன் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று, பொருளாதார நெருக்கடி என்பன காரணமாக கடந்த மூன்று வருடங்களாக இந்நிகழ்வு இடம்பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

# எல்லைப் பாதுகாப்பை விரிவுபடுத்தும் வடகொரியா

## புதிதாக வெளியாகியுள்ள தகவல்



வடகொரியாவில் வெளியுலகத் தொடர்பை முற்றிலும் துண்டிக்கும் வகையிலான நடவடிக்கைகளில் அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜொங் உன் ஈடுபட்டுள்ளதாக செயற்கைக் கோள் படங்களை வைத்து சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதனடிப்படையில் எல்லைப் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு பாரிய மதில் மற்றும் வேலிகளை அமைக்கும் பணிகள் அந்நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.

உலகின் மர்ம தேசமாக அறியப்படும் வடகொரியாவில் மக்கள் எப்படி இருப்பார்கள் என்பது கூட அந்த நாட்டிற்கு மட்டுமே வெளிச்சம். ஊடகங்களுக்கு கட்டுப்பாடு, சமூக வலைத்தளங்களுக்கு அனுமதி இல்லை என சர்வாதிகார ஆட்சியை அந்த நாட்டின் அதிபர் கிம் ஜாங் உன் நடத்தி வருகிறார். அதுபோக, சிறிய குற்றங்களுக்கு கூட மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும்.

அதுமட்டுமன்றி, எந்த மாதிரியான உடை அணிய வேண்டும், தலைமுடி இப்படித்தான் வெட்ட வேண்டும் என்பதில் கூட பல கட்டுப்பாடுகள் உள்ளன.

ரஷ்யா மற்றும் சீனாவுடன் மட்டும் சில உதவிகளை வடகொரியா பெற்று வருகிறது. இந்த இருநாடுகளுடன் எல்லையை வடகொரியா பகிர்ந்து கொள்கிறது. இதனால், வடகொரியாவில் நடக்கும் அட்டுழியங்களை தாங்க முடியாமல் தப்பியோடும் மக்கள் பயன்படுத்தும் பாதையும் இதுவாகவே உள்ளது. அதுபோக கடத்தல் காரர்களும் இந்த வழியையே பயன்படுத்தி வருகிறார்கள்.

கொரோனாவின்போது கடுமையான கட்டுப்பாடுகளை வடகொரியா விதித்த போதும் அந்த நாட்டிற்குள் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது.

இதனால் உலக நாடுகளிலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்திக் கொள்ளும் விதமாக வடகொரியா பிரமாண்ட சுவர் எழுப்பவும் திட்டமிட்டது. அப்போது முதல் இரு எல்லைகளையும் முற்றிலும் மூடும் விதமாக சுவர், வேலிகள் மற்றும் பாதுகாப்பு நிலைகள் ஆகியவற்றை எழுப்பும் பணியை கிம் ஜொங் உன் தொடங்கினார். அப்போது முதல் பல நூறு கிலோ மீற்றர் தொலைவுக்கு எல்லையில் மேம்படுத்தப்பட்ட வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

# புதிய செங்கோல் நிறுவப்பட்டு இந்திய பாராளுமன்றம் திறப்பு







இந்தியாவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பாராளுமன்றக் கட்டடத் தொகுதியை அந்நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (28) திறந்துவைத்தார். பாராளுமன்றத்தில் மக்களவை சபாநாயகர் இருக்கைக்கு வலப்புறத்தில் செங்கோலை பிரதமர் நரேந்திர மோடி நிறுவினார்.

செங்கோல் நிறுவப்படுவதற்கு முன்பாக அதற்கு முறைப்படி பூஜைகள் செய்யப்பட்டன. திருவாவடுதுறை ஆதீனம் உள்ளிட்ட பல்வேறு சைவ மடங்களைச் சேர்ந்த ஆதீனங்கள் முன்னிலையில் வேத மந்திரங்களும் தேவாரமும் ஓத செங்கோலுக்கு பூஜை மேற்கொள்ளப்பட்டது. மேலும், செங்கோலுக்கு புனித நீர் தெளிக்கப்பட்டது. இதையடுத்து, புனித செங்கோல் முன்பாக பிரதமர் நரேந்திர மோடி விழுந்து வணங்கினார்.

இதையடுத்து, வேத மந்திரங்கள் ஓத, தேவாரம் பாட, மங்கள இசை இசைக்க தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், மதுரை ஆதீனம், பேரூர் ஆதீனம், வேளாக்குறிச்சி ஆதீனம் உள்ளிட்ட ஆதீனங்கள் புனித செங்கோலை பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கினார்கள். புனித செங்கோலை கைகளில் ஏந்தியவாறு நாடாளுமன்ற மக்களவைக்குள் சென்ற பிரதமர் மோடி, அங்கு சபாநாயகரின் இருக்கைக்கு அருகில் செங்கோலை நிறுவினார். அப்போது சபாநாயகர் ஓம் பிர்லாவும் உடனிருந்தார். இவ்விழாவில் அமித் ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், யோகி ஆதித்யாநாத் உள்ளிட்ட மாநில முதல்வர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சிறப்பு அம்சங்கள்**

புதிய நாடாளுமன்றக் கட்டடம் ஆயிரத்து 200 கோடி ரூபா (இந்திய மதிப்பு) செலவில், 18 ஏக்கர் அளவுக்கு அதாவது, 64,500 சதுரமீற்றர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

பாரம்பரிய கலைப் படைப்புகள், தொலைநோக்கு பார்வை மற்றும் இந்திய கட்டடக்கலை திறன் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட இந்தக் கட்டடம், 2 ஆண்டுகள் 5 மாதம் 18 நாட்களில் கட்டப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் வாக்களிக்க வசதியாக இருக்கைகளில் பயோமெட்ரிக்ஸ், டிஜிட்டல் மொழிபெயர்ப்பு சாதனங்கள், மாற்றக்கூடிய மைக்ரோ போன்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு உறுப்பினரின் இருக்கையிலும் மல்டிமீடியா காட்சி வசதி உள்ளது. கேலரிகளில் எங்கு அமர்ந்தாலும் தெளிவாகத் தெரியும் வகையில் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஊடகங்களுக்கென புதிய நாடாளுமன்றத்தில் நவீன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது மக்களவை, மாநிலங்களவை, மத்திய ஓய்வு அறை மற்றும் அதிகாரிகளின் அலுவலகங்களைக் கொண்டுள்ளது. முக்கோண வடிவிலான புதிய நாடாளுமன்றக் கட்டடத்தின் பிரதான வாயில்களுக்கு அறிவு, சக்தி, கடமை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கியான் துவா, சக்தி துவார், கர்ம துவார் என இந்தியில் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த 3 வாயில்களுக்கருகில் ஆயிரக்கணக்கான ஆண்டு இந்திய வரலாற்றை விளக்கும் வெண்கலப் படங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், அமைச்சரவையின் பயன்பாட்டிற்காக 92 அறைகள் இருக்கும். மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி அமைப்புகள் சிறப்பான முறையில் இங்கு இடம்பெற்றுள்ளன.

# தீபாவளியை விடுமுறை தினமாக அறிவிக்குக!

## அமெரிக்க எம்.பி. பாராளுமன்றில் கோரிக்கை



தீபாவளி பண்டிகைக்கு அமெரிக்காவில் பொது விடுமுறை அளிக்கவேண்டுமென்று வலியுறுத்தி அந்நாட்டின் பாராளுமன்றத்தில் அமெரிக்க எம்.பி. கிரேஸ் பெங் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

இந்துக்களின் முக்கிய பண்டிகைகளுள் ஒன்றான தீபாவளி பண்டிகையை அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளிலும் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், அமெரிக்காவில் தீபாவளி பண்டிகைக்கு பொது விடுமுறை அளிக் வேண்டுமென்று பாராளுமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திடும்போது தீபாவளி நாள் சட்டமாக ஆகும். பாராளுமன்றத்தில் கோரிக்கை முன்வைத்ததன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த மெங் எம்.பி. கூறுகையில், ''தீபாவளி பண்டிகையானது உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு மிகவும் முக்கியமானது. தீபாவளி விடுமுறை நாள் சட்டம் தீபாவளியின் முக்கியத்துவம் பற்றி அனைத்து அமெரிக்கர்களும் தெரிந்துகொள்வதற்கும் அமெரிக்க பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதற்குமான ஒரு வாய்ப்பாகும்'' - என்றார்.

# இலங்கை அணிக்கு 2 இலட்சம் டொலர்கள் பரிசு



முழு கிரிக்கெட் உலகமும் எதிர்பார்த்துள்ள ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒவ்வொரு அணிக்குமான பரிசுத்தொகையை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. சம்பியனாகும் அணிக்கு 1.6 மில்லியன் டொலரும் இரண்டாவது இடம் பிடிக்கும் அணிக்கு 8 இலட்சம் டொலர்களும் பரிசுத்தொகையாகக் கிடைக்கும்.

அதனைத் தொடர்ந்து 2021 – 2023 டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலின் வரிசையில் தென்னாபிரிக்காவுக்கு (3ஆவது இடம்) 4 இலட்சத்து 50 ஆயிரம் டொலர்களும், இங்கிலாந்து அணிக்கு (4ஆவது இடம்), 3 இலட்சத்து 50 ஆயிரம் டொலர்களும், 5 ஆவது இடம் பிடித்த இலங்கை அணிக்கு 2 இலட்சம் டொலர்களும் கிடைக்கும்.

**பரிசுத்தொகை விபரம்**

தென்னாபிரிக்கா - 4,50,000 டொலர்கள்
இங்கிலாந்து - 3,50,000 டொலர்கள்
இலங்கை - 2,00,000 டொலர்கள்
நியூசிலாந்து - 1,00,000 டொலர்கள்
பாகிஸ்தான் - 1,00,000 டொலர்கள்
மேற்கிந்திய தீவுகள் - 1,00,000 டொலர்கள்
பங்களாதேஷ் - 1,00,000 டொலர்கள்

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# குத்துச்சண்டைப் போட்டியில் கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை



(கந்தளாய் செய்தியாளர்)

47ஆவது அகில இலங்கை எல்.வி. ஜயவீர ஞாபகார்த்த குத்துச்சண்டைப் போட்டியில் கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் வெற்றிப்பதக்கம் பெற்று பாடசாலைக்கும் கந்தளாய் மண்ணுக்கும் பெருமை தேடித்தந்துள்ளதாக பாடசாலை அதிபர் எச்.எம்.நௌஷாத் தெரிவித்தார்.

கந்தளாய் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இக்குத்துச்சண்டைப் போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களான பி.எம்.அஹ்சான் மற்றும் டி.எம்.இல்ஹான் ஆகியோர் 20 வயதுப் பிரிவின் கீழ் கலந்து கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றனர். இது பாடசாலை வரலாற்றிலே முதல் தடவையாக கிடைக்கப்பெற்ற வெற்றியாகும்.

இம்மாணவர்களுக்கு குத்துச்சண்டைப் பயிற்சிகளை வழங்கிய பயிற்றுவிப்பாளர் கமால் ஜயசிங்க மற்றும் பாடசாலை விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.ஜே.எ.நிஸாமி, பாடசாலை விளையாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் எம்.எஸ்.எம்.கபார்கான் ஆகியோருக்கும் பாடசாலை அதிபர் நன்றி தெரிவிப்பதாகக் கூறினார்.

# T10 ப்ளாஸ்டர் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது பொத்துவில் றபா அணி



(பொத்துவில் நிருபர்)



பொத்துவில் வூ ப்ளாஸ்டர் அமைப்பினால் நடத்தப்பட்ட T10 ப்ளாஸ்டர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் றபா அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

பொத்துவில் ப்ளாஸ்ட் அமைப்பினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் பசறிச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் மற்றும் பொத்துவில் றபா ஆகிய கழக அணிகள் மோதிக்கொண்டன. இதில் 15 ஓட்டங்களினால் றபா அணி சம்பியனானது.இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக றபா அணியின் எம். ஜெஸ்ரிக், சுற்றுத் தொடரின் சிறப்பாட்டக்காரராக அந்த அணியின் எஸ்.எம்.சுர்பின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொத்துவில் பிரதேசத்திலுள்ள 30 முன்னணி கழகங்கள் குறித்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திரைப்படமாக வெளியாகும் கங்குலியின் வாழ்க்கைப் பயணம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சௌரவ் கங்குலியின் வாழ்க்கைப் பயணம் திரைப்படமாக உருவாகிறது. இதற்கான படப்பிடிப்புப் பணிகள் இந்த ஆண்டு இறுதியில் தொடங்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு தனது வாழ்க்கைப் பயணத்தை அடிப்படையாகக் கொண்டு பயோபிக் திரைப்படம் ஒன்று உருவாக இருப்பதாக கங்குலி தெரிவித்திருந்தார். அது வெறும் அறிவிப்போடு மட்டுமே நின்றுவிட்டது. அதற்கான பணிகள் எதுவும் தொடங்கப்படவில்லை.இந்த நிலையில், கங்குலியின் பயோபிக் படத்தை பொலிவுட் தயாரிப்பாளர் லவ் ரஞ்சன் தயாரிக்க முன்வந்துள்ளார். சமீபத்தில் கங்குலியை நேரில் சந்தித்து இதுகுறித்து அவர் பேசியதாகத் தெரிகிறது. இதில் நாயகனாக ரன்பீர் கபூர் நடிக்க கங்குலி விருப்பம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. கங்குலியின் ஆரம்ப நாட்களிலிருந்து அவர் பி.சி.சி.ஐ. தலைவராக நியமிக்கப்பட்டது வரை நடந்த முக்கிய சம்பவங்களை இந்தப் படம் கூறவிருக்கிறது.

# சம்மாந்துறை லெஜெண்ட்ஸ் அணியின் சீருடை அறிமுக நிகழ்வும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியும்



(முஹமட் தாணீஸ்)



சம்மாந்துறை அணியினரின் ஏற்பாட்டில் புதிய ஜேர்சி அறிமுகத்துடன் இணைந்து உதைபந்தாட்டப் போட்டி நிகழ்ச்சியும் அண்மையில் சம்மாந்துறை தேசிய பாடசாலை மைதானத்தில் மிகவும் கோலாகலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போட்டியில் எஸ்.டி.ஆர். லெஜெண்ட்ஸ் அணியானது சம்மாந்துறை மண்ணின் உதைபந்தாட்ட ஜாம்பவான்களான ஏ.எல். ஜௌபர் மற்றும் டி.எல்.எம் றஸீன் ஆகியோரின் தலைமையில் சென்ற காலங்களில் துறையூர் மண்ணுக்காக உதைபந்தாட்டத் துறையில் பல பெருமைகளைத் தேடித்தந்த அனைத்து கழக வீரர்களையும் உள்ளடக்கிய ஓர் அணியாக களமிறங்கியிருந்தனர்.

இவர்களை எதிர்த்து மருதமுனை யங்ஸ் அணி களமிறங்கியிருந்தது. ரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் மருதமுனை யங்ஸ் அணியினர் 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7